உ
சிவமயம்

# நாம் தப்பிக்கலாம்

## We Can Escape

(பாலியல் துஷ்பிரயோகிகளை இனங்காண்)

Identify Sexual Abuses




**மலர் சின்னையா** JP
முன்னாள் அதிபர் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
Sp.Trained (Social Studies) B.A, Dip.in.Edu,
Dip in School Management, PG. Dip.in.Poli.Edu, Dip.in.Sp.Edu,
M.Ed, S.L.P.S-1, S.L.E.A.S-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் தப்பிக்கலாம்
# We Can Escape

நூலின் பெயர் :- நாம் தப்பிக்கலாம்

கருப்பொருள் :- பாலியல் துஷ்பிரயோகிகளை இனம் காட்டி, சிறுவர்களைத் தப்பிக்கவைத்தல்.

நூல் ஆசிரியர் :- மலர் சின்னையா<br>முன்னாள் அதிபர்<br>கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

புனைபெயர் :- செம்பியின் செல்வி

முதற்பதிப்பு :- ஓகஸ்ட் - 2014

வெளியீட்டுரிமை :- ஆசிரியருக்கே

விலை :- 100/=

அச்சமைப்பு :- மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ்

தொடர்பு :- இல.41,செம்மணி வீதி,<br>நல்லூர்.<br>T.P - 0770265657



- *துஷ்பிரயோக பாலியல்ஊக்கியை பகுத்தறிவால் கட்டுப்படுத்தலாம். திசை திருப்பிக்கலாம்.*
- *துஸ்பிரயோகிகளை இனங்கண்டால் தப்பிக்கலாம்.*
- *பிறரின்பாலியல் கொடுமைகளைக் காண்பதன் மூலம், தன் காமத்தின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தலாம்.*
- *பெற்றோர், ஆசிரியர்,சமூகத்தினர் நினைத்தால், காமுகத் தவறுகள் செய்யாத, எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கலாம்.*
- *துஷ்பிரயோகிகள் தன் தவறை தானே உணர்ந்து திருந்தினால், அனைவரும் அச்சமின்றி வாழலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**இயல் 01**

1.1 பாலியல் என்றால் என்ன?

1.2 பாலியல் வரலாறு

1.3 பாலியல் தூண்டல்களைத் தணித்தல்.

1.4 எம்மை நாமே தப்பிக்க வைக்கலாம்

**இயல் 02**

2.1 காமுகர்கள் தம்மை இனம் காட்டும் நடத்தைக் கோலங்கள்

2.1.1 மென்மையாக அணுகுபவர்கள்

2.1.2 கண்டதும் காதல்கொள்பவர்களின் அணுகுமுறைகள்

2.1.3 உயர் அதிகாரிகளின் அணுகுமுறைகள்

2.1.4 மந்திர தந்திரகாரர்களின் அணுகுமுறைகள்

2.1.5 போதிக்கும் சமயப் பெரியார்களின் அணுகுமுறைகள்

2.2 ஏமாற்றும் காமுகர்களின் தந்திரோபாய ஓர் அணுகுமுறைகள்

**இயல் 03**

3.1 பெண்கள்

3.2 அறிவுரை

3.2.1 மனிதா உன்னை நீ சிந்திப்பாயா?

3.3 பிள்ளைகளை நெறிப்படுத்துவோம்

3.4 பெற்றோர்கள் நண்பர்கள் என்ற நிலையில்

3.5 ஆசிரியர்களின் பங்கு

3.6 சிறுவர்களே

3.7 தவறான முடிவை எடுக்காதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

"நாம் தப்பிக்கலாம்" என்ற தலைப்பிலே செம்பியின் செல்வி என்ற புனை பெயரைத் தாங்கிய, முன்னைநாள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செல்வி. மலர் சின்னையா மிகச் சிறந்த நூலினை வெளியிட்டுள்ளார்கள். சிறிய நூலாகையால் மிகச் சொற்ப நேரத்தில் படித்துவிடலாம்.

தற்சமயம் நாட்டிலே நடக்கும் நெருக்கீடுகளிலிருந்து குழந்தைகள் தப்பிக்கொள்வதற்கான வழிமுறைகளை இவர் மிகச் சுலபமாக எடுத்தியம்பியுள்ளார். படிப்பவர் மனதிலே படியும் வண்ணம் துணுக்குகளாக வசனங்களை அமைத்துள்ளார். பெற்றோர்கள் யாவரும் இதனை வாசித்து வைக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவச் செல்வங்களை நெருக்கீடுகளிலிருந்து தம்மைத் தாமே தப்பித்துகொள்ளச் செய்வதற்கும், அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொள்வதற்கும் மிகவும் பயனுள்ள ஒரு நூலாகும்.

இந்நூலின் மூலம் எமது குழந்தைகளை நாமே தப்பிக்கவைக்க ஒன்றிணைவோமாக.

த.குருகுலராசா,
அமைச்சர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாண சபை.

த. குருகுலராசா
[illegible]
கல்வி [illegible] வல்கள்
விளை[illegible] விவகாரம்
[illegible] சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபாணந்தக் குருக்களின் வாழ்த்துச் செய்தி

"நாம் தம்பிக்கலாம்" என்ற நூலின் கண் குறிப்பிடப் பட்டவைகள் அனைத்தும் இன்றைய காலத்தின் தேவைகளைக் குறிப்பிட்டு, ஓர் கலங்கரை விளக்கமாக வழிகாட்டியாக அமைந்துள்ளது. இன்றைய சமகாலப் பத்திரிகை களைப் புரட்டினால் அவற்றில் காணப்படும் பெரும்பாலான செய்திகள், வெளியிடப்பட்டிருக்கும் விடையங்கள் என்பவை கீழ்த்தரமான செய்தி களும், ஆபாசமான வார்த்தைப் பிரயோகங்களுமே.

பாலியல் துஷ்பிரயோகங்களைக் குறைத்துத் தவிர்ப்பதற்காக இப்படி யான ஆக்கங்கள் வெளியிடப்படுவது காலத்தின் கட்டாயமாகும். நூலா சிரியர் மலர் சின்னையா அவர்கள் காய்தலுவத்தலின்றி துஷ்பிரயோகங் களைத் தடுப்பதற்கான வழிமுறைகளை நன்கு குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு சமூகத்தின் இளஞ் சிறார்களின் வாழ்க்கைப் பயணத்தினைச் சரியான வழியில் கொண்டுசெல்வதற்கு இந்நூல் உதவும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. மதகுருமாக்கள், வித்தியாகுருமார்கள், மருத்துவர்கள் ஆகியோரின் பெரும்பங்கு சமூகத்தை வழிப்படுத்துவதில் முக்கியமான தாகும். திருமூலர் திருமந்திரத்தில் "மறைபொருட்கூற்று" என்னும் பகுதியில் ஓர் பாடல் இங்கே சுட்டிக்காட்டுகின்றேன்.

பார்ப்பானகத் தினிலே பாற்பசுக்கள் ஐந்துண்டு
மேய்ப்பாருமின்றியே வெறித்துத் திரிவன
மேய்ப்பாருமுண்டாய் வெறியுமடங்கினால்ப்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே.

இங்கு பார்ப்பானகம் என்பது எமது உடம்பாகும். பாற்பசுக்கள் ஐந்து என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புறக்கருவிகள். மேய் பாரென்பது குருவாகும். குருவும் அமைந்து வெறியுமடங்கினால் பசுக்கள் ஐந்தும் பால் சொரியுமென, மனித உள வளப்படுத்தலையே திருமூலர் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவகையில் நூலாசிரியர் மலர் சின்னையா அவர்களின் இந்த ஆக்கம் இளையதலைமுறையினரை நல்வழிப்படுத்த அமைந்த வழிகாட்டி என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எனவே அவரைப்பாராட்டி ஆசி கூறி, மேலும் இப்படியான ஆக்கங்களை அவர் சமூகத்திற்குத் தருவதன் நிமித்தம் நோயற்ற நீண்ட வாழ்வையும், இஷ்டசித்திகளையும், இறைவன் தருவாராக எனப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

சிவ ஸ்ரீ.க.கிருபாணந்தக் குருக்கள்
பிரதம குருக்கள்
இலஞ்சிபரணயம் சோலை அம்மன்
ஆலயம் சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம் I

மனித வாழ்க்கையில் தாய் தந்தையர்க்கு அடுத்த படியாகக் கை எடுத்து வணங்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள். தாம் கற்பிக்கும் மாணவர்கள் தம்மிலும் வித்தகர்களாக வரவேண்டும் என்ற நல்நோக்கு உடையவர்கள். அத்துடன் மாணவர்களின் தொழில் உயர்ச்சிக்கும் ஏணியாய் நின்று வழிகாட்டி இன்புற்று மகிழ்கிறவர்கள்.

அத்தகைய மகான் ஒருவரை என் வாழ்க்கையில் கிடைக்கப்பெற்றேன். நான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவியாகக் கல்வி கற்றவேளை அவர் எனக்கு கல்வியியலைக் கற்பித்த சிறந்த விரிவுரையாளர். கடமை உணர்வும், மாணவர்களை உற்றுநோக்கிக் கற்பிக்கும் அணுகு முறையும், அன்புடனும், பண்புடனும் மதிக்கும் தன்மையும் அவரையும் உன்னத குருவாக மாணவர்கள் அனைவரும் மதித்தனர்.

நான் ஆசிரிய கலாசாலைப் படிப்பை முடித்து பத்தொன்பது வருடங்களுக்குப்பின் அவரை வீதியில் ஒரு நாள் சந்தித்தேன். என்னைக் கண்டதும் என்னை என் தொழிலை, என் உயர்வைப் பற்றியெல்லாம் கேட்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஓய்வுபெற்ற பின் பகுதி நேர விரிவுரையாளராக தான் கடமையாற்றி வருவதாகக் கூறினார். எனக்கும் விரிவுரையாளராகக் கடமையாற்ற விருப்பம் உள்ளது. என்றேன். அப்போது கலாசாலையில் விரிவுரையாள ருக்கான வெற்றிடம் உள்ளனவா? எனக் கேட்டேன். எதற்கும் அதிபரைக் கேட்டுச் சொல்கின்றேன் என்றார். தொடர்ந்து குருவின் மூலம் அதிபரின் விருப்பத்திற்கிணங்க விரிவுரையாளராக நியமனம் பெற்றுக்கொண்டேன்.

நியமனக் கடிதம் பெற்று கலாசாலைக்குச் சென்று விரிவுரையாற்றத் தொடங்கினேன். அக்காலத்தில் எனது ஓய்வு நேரத்தில் எனது குரு என்னை நூல் நிலையத்திற்கு கூட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று நான் விரிவுரையாற்றும் பாடங்களுக்குரிய நூல்களை எடுத்துத் தந்து வாசிக்கச் சொல்வார். தன்னிடமுள்ள உளவியல் புத்தகங்களை என்னிடம் தந்து ஆயத்தப்படுத்திக் கற்பிக்க உதவும் எனக் கூறி என்னை வழிப்படுத்தினார்.

அவரின் முழு மனத்தின் ஆசியினால் நான் கற்பிக்கத் தொடங்கிய பின் நடந்த கல்லூரிப் பரீட்சைகளில் உளவியல் பாடத்திலும், சுற்றாடல் விஞ்ஞானத்திலும் மாணவர்களில் அதிகமானோர் விசேட சித்திகள் பெற்றனர்.ஏனைய மாணவர்கள் திறமைச் சித்தி பெற்றனர். இந் நிலையைத் தொடர்ந்து வந்த பரீட்சைப் பெறுபேறுகளிலும் மாணவர்கள் சாதித்தனர்.

நான் எழுதும் புத்தகங்கள் சமூகப் பெறுமானம், கல்விப் பெறுமானம் பெற எனது குரு வழிகாட்டிய உளவியலும், சுற்றாடல் விஞ்ஞானமும் கை கொடுத்தது. இன்றும் கை கொடுக்கின்றது.

கல்வி நிர்வாக சேவை நியமனத்தை பெறவும், கோப்பாய் ஆசிரியகலாசாலை அதிபராக நியமனம் பெறவும் அவரே எனக்கு வித்திட்டார். எழுத்துத்துறையில் நான் கால் பதிக்கவும் அவரே ஊக்குவித்தார். எனது ஆக்கங்களைப் பார்த்துப் பாராட்டினார். பலருக்கு என்னை மேன்மைப்படுத்தி அறிமுகப்படுத்தினார்.

குரு அவர்களின் மேன்மைப்படுத்தலால் கவிதை, பாடல், கட்டுரை, சிறுகதை எழுத்தாளராகவும், பாடல் இசையமைப்பாள ராகவும் என்னை உயர்த்தவும் அவற்றில் பாராட்டுப் பெறவும் முடிந்தது.

பிறக்கும் போதே உன்னத குருவாகப் பிறந்த எனது குரு மேன்மைதகு குககுமரராஜா அவர்களின் பாதமதில் என்னால் உருவாக்கப்பட்ட "நாம் தப்பிக்கலாம்" என்னும் இந் நூலைக் காணிக்கையாக்கி அவர் பாதமதில் சமர்ப்பித்து சிரம் தாழ்த்திப் பணிகின்றேன்.

என்றும் நன்றியுடன்
மலர். சின்னையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் நுகர்வு II

சமூகத்தில் தற்போது பெருகி வரும் துஷ்பிரயோகங்களில் பாலியல் துஷ்பிரயோகம் நெஞ்சை வருடி நிற்கும் மிகப் பெரிய துஷ்பிரயோகமாக விளக்குகின்றது. இதில் பச்சிளம் சிறார்கள் முதி யோரால் கற்பழிக்கப்படுவது மனிதத்தை மிஞ்சிய ஈனச் செயலாக உள்ளது. நீதியைக் கடந்து, பந்தபாசத்தை விலக்கி, உறவு முறையை மறந்து, மனச்சாட்சியை இருட்டாக்கி, வயது நிலைக் கப்பால் பச்சிளம் குழந்தைகள் என்றும் பாராமல் பெரியவர் களால் சிறுவர்களுக்கு அநீதி இளைக்கப்படுகின்றது. தன் தாய், தன் பிள்ளை, தனக்கு இத்தகைய பாலியல் கொடுமை நடந்தால் எவ்வாறான தாக்கம் ஏற்படும் என நினைத்துப் பார்க் காதவர்களாக விளங்குகின்றார்கள். எமது சமூகத்தின் பல்வேறு தரப்பினராலும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டு வருவது அறிவியல் வளர்ந்த இக் காலத்து மானிடர்க்கு இழுக்கான செயலாகும். கற்றவர், கற்காதவர், பதவியில் இருப்பவர், பதவியற்றவர், தந்தை, சகோதரர், மாமன், மச்சான், இளைஞன், முதியவர், அதி முதியவர் என்ற நிலையில் ஆண் வர்க்கத்தவர் சிலர் புரியும் பாலியல் துஷ் பிரயோகம் எண்ணில் அடங்காதிருக்கின்றது. இத்தகையவர் களிட மிருந்து சிறுவர்களைக் காப்பாற்று வதற்கு மதில் கட்ட முடியாது.

சொந்தவீடு, பாடசாலை, பொது இடங்கள், அலுவலகங்கள், அனைத்திலும் சிறுமிகள் தொடக்கம் வயதுவந்த பெண்கள் வரை எங்கும் தம் கற்பைக் காப்பாற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் பெண்களின் வாழ்க்கை என்பது பயங்கரமானதாக மாறிக்கொண்டிருக்கின்றது. பெண் பிள்ளைகளை பெற்ற ஒவ் வொரு தாய் தந்தையரும் மடியில் நெருப்பைக் கட்டியவர்கள் போல் நிம்மதியற்று வாழ்கிறார்கள். பாலியல் பற்றி அறிய முடியாத சிறு வயதினரை பெற்றோர் மட்டுமன்றி அனைவருமே காமுகர்களிடமிருந்து காப்பாற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய காலம் இது.

இங்கு பாலியல் அத்துமீறல்களைச் செய்பவர்கள் எனக் குறிப்பிடப்படுவோர் நல் நடத்தை சாராத ஆண்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கின்றது. தூய தந்தையும், தூய காதலனும், தூய மாமனும், நல் முதியவர்களும் மற்றும் ஏனையோரும் இதில் அடங்கார்.

இப்பாலியல் அத்துமீறல்கள் தொடர்பாக “சிறுவர் துஷ் பிரயோகம்” என்று பத்திரிகைகளில் எழுதுவது, அமைப் புக்கள் தோன்றி குரல் எழுப்புவது என்பவற்றிலும் பார்க்க, சிறுவர்கள் மத்தியிலும், தாய் தந்தையர் மற்றும் சமூகத்தினர் மத்தியிலும் வருமுன் வகை செய்தல் சாலப் பொருத்த முடையதாகும்.

சிறுவர்கள் தொடர்பிலான சட்டங்களைச் செயற்படுத்தும் பொலிசார், சட்டத்தரணிகள், நீதி மன்றம், சிறுவர் அமைப்புக்கள் மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, பாலியல் கொடுமைகளைக் களைவதற்கான செயல் ரீதியான திட்டமிடலைச் செய்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

இவற்றிலும் பார்க்க சிறுவர்கள் காமுகர்களின் கபடத்தனங்களை அறியக் கூடிய வகையில் அவர்களுக்கான அறிவுரைகளை கிராமங்கள் தோறும் சகலருக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

இருப்பினும் சிறுவர்கள், தன்னைத்தான் காத்துக் கொள்ளவும், தம் பிள்ளைகளைப் பெற்றோர் காப்பாற்றிக் கொள்ளவும், காமுகர்கள் தம் பாலியல் பொறிமுறைகளை மற்றவர் இனம் காண்பர் என்று அச்சம் கொள்ளவும், அதனால் காமுகர்கள் தம் மனதைக்கட்டுப்படுத்தவும், முதியவர்கள் தம் சேட்டைகளைச் சமூகம் பொறுத்துக் கொள்ளாது என ஒதுங்கவும், இன்றைய சிறுவர்கள் நாளை காமுகர்களாக உருவாகாமல் தம்மைத் தாம் நெறிப்படுத்தவும், இந் நூல் அனைவரையும் வழிப்படுத்தி நிற்கும் என எண்ணுகின்றேன்.

எம் மத்தியில் நிகழும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் தெரிந்த நடைமுறைகளை வைத்தும், ஏனையவர்களிடம் கேட்டுத் தெரிந்தவற்றையும் வைத்து, என் அறிவிற்கு எட்டிய வகையில் இந் நூல் ஆக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு இழைக்கப்படும் பாலியல் சீரழிவை அறிந்து தமக்குள் ஐயோ! என்று கதறி அழுது விடுவோருக்கும், சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்து விட வேண்டும் என முன் நிற்போருக்கும், அறியாத வயதில் பயங்கர பாலியல் கொடுமைகள் பிள்ளைகளை நெருங்காது இருக்கவும். என்னாலான சிறு பங்களிப்பாக “நாம் தப்பிக்கலாம்” என்னும் பெயரில் இந்நூல் வெளியிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் உணர்வுகளையோ அன்றி மனிதனின் பாலியல் கொடுமைகள் பற்றியோ அறியமுடியாத சின்னஞ்சிறுசுகள் படும் வேதனைகளும், பயங்கரச்செயல்களும் இனிமேல் நடைபெறாமல் இருக்க சிறுவர்களே காமுகர்களை இனங்கண்டு தப்பித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்களின் எதிர்காலம் விருப்பிற்குரிய வாழ்க்கையாக அமைய வேண்டும் என்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

மேலும் இந்நூலானது ஒவ்வொரு பாடசாலைப் பிள்ளைகளின் கரங்களின் மூலம் அவர்களின் குடும்பங்களை சென்றடைகின்ற போது, பாலியல் குற்றம் புரியும் நபர்களையும் சென்றடைகின்றது. அவர்களும் இந்நூலை வாசிப்பதன் மூலம் அவர்கள் திருந்திக்கொள்ளவும், அவர்களைத் திருத்திக் கொள்வதற்கும் இந்நூல் பங்களிப்புச் செய்யும் என நம்புகின்றேன்.

**மலர். சின்னையா**
**நூலாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 01

## 1.1 பாலியல் என்றால் என்ன?

பாலியல் என்பது அனைத்து ஆண், பெண் இருபாலார்க்கும் இயற்கையாகத் தூண்டப்படும் உடல் உள தூண்டலாகும். அத் தூண்டல் பருவம் அடைந்த அனைத்து உயிரினங்களிலும் முனைப் புப் பெறும். பதினொரு வயதிற்கு மேல் அத்தூண்டல் மனிதர் களிடம் ஆரம்பிக்கின்றது. இதிலிருந்து உயிர்களைப் படைக்கும் உடல்களின் ஈர்ப்புச் சக்தியே பாலியல் எனலாம். அது கடவுள் செய் கிற படைப்புத் தொழிலைப் போன்றது. அதாவது தம் தம் இனங் கள் பெருகுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட கடவுளின் ஏற்பாடாகும்.

ஒருவன் ஒருத்தி என்ற நிலையில் ஆண், பெண் இணைந்து குழந்தையைப் பெற்றெடுக்க எம் சமூகம் ஒழுக்க நியதி களை வகுத்துள்ளது. பருவம் வந்த ஆண், பெண் இருவருக்கும் உரிய வயது (23 வயது) வரை காத்திருந்து பெற்றோர், உற்றோர் சேர்ந்து பொருத்தம் பார்த்து நாள் நட்சத்திரம் பார்த்து பெரியோர் சாட்சியாக, கடவுள் சாட்சியாக வைத்துத் திருமணச் சடங்குகள் செய்து ஆண், பெண் இருவரையும் சேர்த்து வைப்பர்.

இவ்விருவரும் முதல் முதல் சேரும் நாள் பாலியலை தூய்மையாகக் கையாண்டு இன்பம் அனுபவிக்கும் முதல் இரவு. இத்தகைய பாலியல் ஒழுங்கு முறைமை மதிக்கப்படுகின்றது.

ஒழுங்கற்ற முறையில் பாலியலை பிரயோகிப்பதனையே பாலியல் கொடுமை, பாலியல் வன்முறை, வன்புணர்ச்சி பாலியல் துஷ்பிரயோகம் எனப்படுகிறது. ஆண், பெண் இருவரும் சமூக ஏற்புடமையை ஏற்று பெற்றோர் சம்மதத்துடன் கல்யாணம் செய் வது பாலியலுக்கு அழகு. பெண்ணின் விருப்பின்றி ஆணும் ஆணின் விருப்பின்றிப் பெண்ணும் அத்துமீறி மற்றவர் மீது தன் பாலியல் வேட்கையைத் தீர்த்துக் கொள்ளும் சம்பவங்களே துஷ்பிரயோகம் எனப்படுகிறது. இவர்கள் காமுகன், கூர்த்திகன், தாசி என அழைக்கப்படுகின்றனர். இதில் விருப்பின்றி பாதிக்கப்பட்டவர் உடல், உள ரீதியில் பாதிக்கப்படுகிறார். அத்துமீறியவர் தண்டிக்கப்படு கிறார். இவர்களைச் சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை. தம்மோடு சேர்த்துக்கொள்ளாமல் தள்ளி வைத்துவிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 பாலியல் வரலாறு

ஓர் உயிரியின் கரு உயிரியாக உருவாகும் போதே பாலியல் தூண்டல்களும் இணைந்து உருவாகின்றது. அதனால் பாலியல் என்பது பிறப்புரிமை கொண்ட ஊக்கி எனலாம். உயிரி ஒன்று கருவறைக்குள் உருவாகும் போது கருவை இயக்கி நிற்பதுடன் கருவறைக்குள் ஊர்ந்து துடித்து உயிரை இயக்கி நிற்பதும் பாலியல் ஊக்கியே.

குழந்தை பிறந்த பின் கைசூப்புவது மலத்தை அளைவது, பிறப்புறுப்பைத் தொடுவது எடுத்த பொருட்கள் எல்லாவற்றையும் வாய்க்குள் சுவைத்துப் பார்ப்பது போன்ற செயல்களும் பாலியல் வளர்ச்சிக்கூறின் இரண்டாம் படிநிலை எனலாம்.

முன் பிள்ளைப் பருவத்தில் (4-6வயது) தன் திறனைக் காட்ட ஏறுதல், பாய்தல் உடைத்தல், துள்ளுதல், ஓடுதல் ஆராய்தல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் பாலியலின் மூன்றாம் படிநிலையே.

பின் பிள்ளைப் பருவத்தில் (7-9 வயது) கூட்டாகச் சேர்ந்து செயல்படுதல், ஒத்த வயதினருடன் சேருதல், நண்பர்களைச் சேர்த்தல், சொல்லும் செயல்களை உடனடியாகச் செய்தல், எந்த நிலையிலும் துடிப்புடன் இயங்குதல் போன்ற அனைத்துச் செயல்களும் நான்காம் நிலைப் பாலியல் உந்தல் எனலாம்.

முன்கட்டிளமைப்பருவத்தில் (10-12 வயது) அவர்களின் உடலில் மாற்றங்கள் ஆரம்பிக்கும். அதனால் அவர்களின் மன எழுச்சிகளில் மாற்றம் ஏற்படும். தம் உடல் உறுப்புக்களின் மறை விடங்களில் ரோமங்கள் ஆரம்பிப்பதும், பெண் பிள்ளைகளுக்கு மார்பகங்கள் அரும்ப ஆரம்பிப்பதும் அவர்களின் சிந்தனையைக் குழப்பி தன்னைத்தான் சிந்திப்பதில் ஆர்வம் காட்டுவர்.

தாம் சிறியவர்களும் இல்லாமல் வளர்ந்தவர்களும் இல்லா நிலையில் இருப்பதாக உணர்வர். அந்நிலையில் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிலையில் குழப்ப நிலை தென்படும். இவ்வறிகுறிகள் அவர்கள் பூப்படைவதற்கான ஆரம்ப நிலை எனலாம். அதாவது பாலியல் முனைப்பின் வெளிப்பாட்டின் ஆரம்ப நிலை எனலாம்.

பின் கட்டிளமைப்பருவத்தை (13-18 வரை) அடைந்தவர்கள் தம்மை ஒரு தலைவன் என்ற நினைப்பில் செயற்பட ஆரம்பிப்பர். மறைவிடங்களில் உரோமங்கள், கமக்கட்டில் ரோமங்கள், ஆண்பிளளைகளுக்கு தாடி மீசை ரோமங்கள், பெண்பிள்ளைகளுக்கு மார்பகங்கள் வளர்ந்த நிலை, பெண்பிள்ளைகள் பருவமடைதல், சூலக முட்டைகள் உருவாதல் வெளியேறுதல், ஆண்களுக்கு விந்து உருவாக்கம், விந்து வெளியேற்றம் போன்ற செயற்பாட்டை அவர்களுக்குள் இருக்கும் கோமோன்கள் இயக்கி பாலியல் உந்தலையும், அவற்றின் செயற்பாடுகளையும் இயக்கும். ஆண் பிள்ளைகளின் குரலில் மாற்றம் ஏற்படும்.

இவர்களின் பாலியல் வெளிப்பாடு தன்னைத் தானே வெளிக்காட்டி நிற்பதில் முனைப்பும் பெறுவர். சிறந்த தலைவர்கள், நடிகர்களின் நடத்தைகளைப் பின்பற்றுவர். அவர்களின் நடை உடை பாவனைகள், பேச்சு மற்றும் நடிப்பு போன்றவற்றை தன்னில் வெளிக்காட்டி மற்றவர் முன் செயற்படுவர். எதற்கும் அஞ்சாமல் தலைமை தாங்கிச் செயற்பட்டு வெற்றியீட்டுவர். சமத்துவம், நீதி, ஒழுக்கம் போன்றவற்றைக் கடைப்பிடிப்பர். இவற்றை மீறும் செயல்களை எதிர்ப்பர். நியாயம் கேட்பர். தன்பால் நண்பர்களையும் எதிர்ப்பால் நண்பர்களையும் கூட்டாகச் சேர்த்துச் செயற்படுவர். தப்புத்தவறுகள் செய்யார்.

விளையாட்டுக்கள், பட்டிமன்றங்கள், கலை நிகழ்வுகளில் கூடிய நாட்டம் காட்டுவர். பெண் பிள்ளைகள் தம்மை அலங்கரித்துப் பார்ப்பதில் கூடிய நேரத்தைச் செலவளிப்பர். இருபாலாரும் அடிக்கடி கண்ணாடி பார்ப்பர். தம் அழகை மெருகூட்டி எதிர்ப்பாலரை கவர முனைவர். தாம் சொல்பவற்றைச் சரியானது என்பதில் முனைப்புடன் செயற்படுவர். இத்தகைய முனைப்பு, பாலியலின் உயர் பண்பின் சிறப்பு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவத்தினருக்குச் சிறந்த வழிகாட்டலும், அன்பும், அரவணைப்பும், நற்போசாக்கும், மதிப்பும் கருசனையும் காட்டி அவர்களின் நேரத்தை வீண்விரயமாக்காமல் சரியான வழியில் செலவழிக்க வைப்பின் அவர்களை உயர்நிலைக்கிட்டுச் செல்ல முடியும்.

இக்காலப் பகுதியில் முனைப்புறும் பாலியல் தூண்டல்களை அவர்களின் நேரப்பயன்பாடு, நல்ல நண்பர்கள், நல்ல பொழுதுபோக்குப் போன்றவற்றின் மூலம் மறைநிலையில் வைக்கலாம். இத்தகைய நேரப்பயன்பாடுகள் பயனற்றதாக இருப்பினும், குடும்பத்தில் அன்பு, பாசம் காட்டாத நிலை, அமைதி யின்மை, சரியான வழிப்படுத்தலின்மை, மதிப்புக் கொடாமை, குடும்பத்தில் அமைதியின்மை, தேவைகள் நிறைவேற்றப்படாமை, புறம் தள்ளுதல் போன்றவற்றால் மறை நிலையிலிருந்த பாலியல் உந்தல் அன்பைத் தேடி, அமைதியைத் தேடி, இன்பத்தைத் தேடி, பொழுது போக்கைத் தேடி. அங்கீகாரத்தைத்தேடி எதிர்பாலாரிடம் சரணடைய முனைப்பைக் கொடுக்கும்.

ஒருவரின் பிறப்பு முதல் தோன்றி மறை நிலையில் இருந்து செயற்பட்ட பாலியல், படித்துப் பட்டம் பெற்று, தொழில் பெற்ற பின் உள ரீதியான உடல் ரீதியான தேவையாக நிறைவுசெய்யும் போது திருமணம் மகத்துவம்மிக்கதாக அமையும்.

இவற்றைப் பெற்றோர்கள் உற்றுநோக்கித் தம் பிள்ளைகள் குழப்படிகாரர் என்று நோக்காது, அவர்களின் பாலியல் உந்தல் நிலைகளுக்கேற்ப அவர்களைப் பராமரித்தல் மிக மிக அவசியம்.

பிள்ளைகளின் செயற்பாடுகள் பெற்றோர்களுக்கு எதிரானவையோ, அன்றி சமூக விழுமியங்களுக்கு எதிரான வையோ என்று எண்ணாது. அவர்களின் இயல்பான (பாலியல்) ஊக்கிகளின் செயற்பாடுகள் என்பதைப் பெற்றோரும், ஆசிரியர் களும், சமூகமும் ஏற்று அவர்களின் ஊக்கிகளை இனம்கண்டு நல்ல பாதையைக் காட்டுதல் மிக மிக அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 பாலியல் தூண்டல்களை தணித்தல்

பாலியல் உந்தல்கள் உடலில் ஏற்படும் போது அவ் உந்துகையை திசை திருப்பலாம். தொழில்களில் ஈடுபடுவதன் மூலமும், வெங்காயம், போன்ற உணர்வுகளைத் தூண்டக்கூடிய உணவு வகைகளை குறைத்துக் கொள்வதன் மூலமும், திருமணம் செய்வதன் மூலமும் பாலியல் உந்தலைத் தணிக்கலாம். பாலியல் சிந்தனையை கட்டுப்படுத்த பாலியல் திரைப்படங்கள் பார்ப்பதைத் தவிர்த்தல், அழகியல் சம்பந்தமான கலையாக்கத்தில் ஈடுபடுதல், தன்னுடைய நடிப்பை வெளிக்காட்டுதல், சமய சிந்தனைகளில் ஈடுபடுதல், சமூகத் தொண்டுகள் செய்தல், ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல், புத்தாக்கங்களை உருவாக்குதல், இறைவனோடு ஒன்றித்திருத்தல் போன்றவற்றின் மூலம் கட்டுப்படுத்தலாம். திசை திருப்பலாம். இத்தகைய உத்திகளை மனிதன் தன் பகுத்தறிவு கொண்டு சீர் தூக்கிப் பார்க்கின்ற போது பாலியல் என்பது உயிர்களை இயக்கி நிற்கின்ற, உயிர்களை மகிழ்ச்சிப் படுத்துகின்ற, உயிர்களைப் படைக்கின்ற உயிர் இயக்கி என்பதை ஒவ்வொரு மனிதரும் உணர்வர்.

பாலியலைத் தூய்மையாகக் கையாள்பவர்களின் வாழ்க்கை என்றும் மகிழ்ச்சிக்குரியது. எய்ட்ஸ் என்கின்ற கொடிய வியாதி அவர்களை நெருங்கவே முடியாது. குடும்பத்தில் சந்தேகம் இருக்காது. மனம் சலனமின்றி சமநிலையில் இருக்கும். புதிய உற்சாகம் பிறக்கும். தன்னை அறியாது ஆளுமை உருவாகும். மற்றவர் முகத்தை கூச்சமின்றி நிமிர்ந்து பார்க்கலாம். முகம் ஒளி பெறும். சகலரும் அவரை மதிப்பர். அமைதியான வாழ்வு ஏற்படும்.

## 1.4 எம்மை நாமே தப்பிக்க வைக்கலாம்

இன்றைய உலகில் திரை மறைவில் நடக்க வேண்டிய பாலியல் நடைமுறைகள் அனைத்தும் தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களில் வெளிப்படையாகக் காட்டப்படுகின்றன. பாலிய்லின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பு நிலையே தெரியாத சிறுவர்கள் அவற்றைப் பார்ப்பதன் மூலம் அவர்களின் மனநிலை, உடல் நிலை ஊக்கிகள் அதற்கான முனைப்பை தூண்டுகின்றன.

இந்நிலையால் இன்று எந்த வயதினரையும் பெண் பிள்ளைகள் நம்பி நடக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அதனால் ஆண்களின் பாலியல் வலை வீச்சில் பிள்ளைகள் சிக்காமல் இருக்கவும், தமது பாலியல் முனைப்பைத் தாமே வெளிக்காட்டாமல் நெறிபடுத்தவும், கீழ்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு, அவ்வாறு நடப்பின் தம்மை தாமே காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

- கண்ணோடு கண் உற்றுப் பார்ப்பதைத் தவிருங்கள்.
- காதல் மொழிகளுக்கு இடம் கொடாதீர்கள்.
- உங்களை அடக்கமாக அலங்கரித்துக் கொள்ளுங்கள்.
- ஆடம்பர நவநாகரிக உடையணிவதைத் தவிருங்கள்.
- உற்ற ஆண் நண்பர்களையும் நம்பாதீர்கள்.
- தீயவழிக்கு இட்டுச் செல்லும் பெண்களுடன் நட்புக் கொள்ளாதீர்கள் .
- உறவினர்கள், தெரியாதவர்கள் நீங்கள் தனித்திருக்கும் போது வீட்டிற்கு வந்தால் வீட்டிற்கு வெளியில் நில்லுங்கள். அல்லது வீட்டைப்பூட்டி உள்ளுக்குள் நின்று பேசுங்கள்.
- வீட்டை சோதனை இட வந்தோம் என்றாலும் கதவைத் திறக்காதீர்கள்.
- வீட்டிற்குள் வந்தவர் தண்ணீர் தரும்படி உங்களிடம் கேட்டால் யன்னல் வழியாக கொடுங்கள்.
- எவராவது கையைப்பிடித்து இழுத்தால் உரத்துச் சத்தமிடுங்கள்.
- நீங்கள் பாடசாலையில் அல்லது வீட்டில் நிற்கும் போது உங்கள் அம்மா அல்லது அப்பா காயப்பட்டு/நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருக்கிறார்கள் என்று கூறுவர்.
- அத்துடன் உங்களை உடனடியாக அழைத்து வரும்படி தன்னை அனுப்பினர் என்று கூறுவர். உங்களிடம் வரு வோரின் வார்த்தைகளை நம்பாதீர்கள் உடனடியாக அம்மா, அப்பாவின் தொலைபேசி இலக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு பொறுப்பானவரிடம் கொடுத்து உண்மை நிலையை அறிந்து உங்களுக்குப் பொறுப்பானவரின் உதவியுடன் ஏற்ற முறையில் நடந்து கொள்ளுங்கள்.

- உங்களை அழைப்பவர்கள் பாலியலுக்கு மட்டுமன்றி வேலை வாங்கவும், உடல் உறுப்புக்களை அபகரிக்கவும், பலியிடவும் அழைத்துச் செல்ல கூடும். இதை நினைத்து அச்சப்படாதீர்கள். பாதுகாப்போடு இருந்தால் அச்சமில்லை. தற்துணிவை அந்நேரம் உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- உங்களை பின் தொடர்ந்து வந்து கேள்வி கேட்பவருக்குப் பதில் கூறாதீர்கள்.
- அடார்த்தாய் உங்களை வாகனத்தில் ஏற்றிச் சென்றால் அழுகையையும் அச்சத்தையும் விடுத்து, அவர்களுடன் சார்ந்து நடித்து கோயில்கள், பாடசாலைகள், பொலிஸ் உத்தியோகத்தர் நிற்கும் இடங்கள், பொதுமக்கள் கூட்டமாயிருக்கும் இடங் களில் வாகனத்தை நிறுத்தினால் கடத்தியவர்களுக்குத் தெரி யாதபடி ஓடிச்சென்றுகாப்பாற்றும்படி சத்தமிடுங்கள்.
- வெளியேற முடியாவிடின் வாகனத்தின் மீது அடித்துச் சத்தம் எழுப்புங்கள். அனைவரின் கவனமும் உங்கள் பக்கம் திரும்பும் அப்போது உங்களுக்கான பாதுகாப்பில் பலர் பங்களிப்பர்.
- உங்கள் வீட்டுத் தொலைபேசி, குடும்பத்தவரின் கையடக்க தொலைபேசி இலக்கங்களைப் பாடமாக்கி வைத்திருத்தல் அவசியம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களின் தகவல்களை சந்தர்ப்பங்களுக்கேற்ப அவர்களுக்கு அறிவித்து மீள்வதற்கு வழிதேட முடியும்.
- உங்கள் வீட்டு முகவரியையும் பாடமாக்கி வைத்திருங்கள். நீங்கள் ஆபத்தில் சிக்கி இருக்கும் இடத்திலுள்ள கடைகள் அன்றி வீதிகளில் எழுதப்பட்டிருக்கும் இடத்தின் பெயர்களைப் பார்த்து நினைவில் வைத்திருத்தல் அவசியம்.
- நீங்கள் இப் பெயர்களைத் தொலைபேசியில் சொல்லும் போது உரியவர்கள் நேரடியாக அவ்விடத்திற்கு வருவதற்கு உதவும்.
- எதற்கும் துணிவு தான் துணை என்று நம்பிக்கையுடன் செயற்படுங்கள். நிதானத்தை இழக்காதீர்கள்.
- உங்களைத் தவறாக அணுக வருபவர்களை கெஞ்சி மன்றாடி அவ் ஆபத்திலிருந்து விடுவிக்க முயற்சியுங்கள்.
- கயவர்கள், கெட்டவர்களுக்குள்ளும் இரக்கம் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உதவியும் செய்யலாம். தனிப்பட்டமுறையில் சேர்ந்து வந்தவருக்குத் தெரியாமல் உங்களை ஏமாற்றிக் கூட்டிச் சென்றும் விடுவர்.

- நம்பியும் நம்பாமலும் நடக்க அவர்களின் மனநிலையை அறியுங்கள்.
- தனியார் வகுப்புக்கள், பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள், யாருமற்ற பற்றைகள், காடுகள், தனி அறைகளுக்கு எவராயினும் அழைத்தால் செல்லாதீர்கள்.
- அவர்கள் தரும் தீன்பண்டங்கள், குடிபானங்கள் எவற்றையும் உண்ணாதீர்கள், பருகாதீர்கள்.
- காடுகள், பற்றைகள் உள்ள இடத்துக்கு அழைத்துச் சென்றால் சென்றவழியால் திரும்பி ஓடிச் சென்று விடுங்கள்.
- ஆசிரியர்கள் பூசாரிகள், மதகுருமார்கள், இராணுவத்தினர் போன்றவர்கள் சந்தேகத்திற்கிடமாக அழைத்தால் செல் லாதீர்கள், அத்துமீறிக் கையைப்பிடித்து இழுத்தால் உரத்து சத்தமிடுங்கள். அவ் இடத்தைவிட்டு அகன்று செல்லுங்கள்.
- ஒருவன் பாலியல் சேட்டை புரிய முற்படும் போது, உங்கள் நகங்களாலும், பற்களாலும் முடிந்தவரை அவனைக் காயப்படுத்துங்கள்
- சட்டைப் பின்னை எடுத்து அவர்கள் மீது குத்துங்கள். உங்கள் உடைகளைக் கழற்றிவிட்டால் பின்புறத்தை காட்டியவாறு போராடுங்கள்.
- நிலத்தில் விழுத்திவிட்டால் கால்கள் இரண்டையும் அடுக்கி இறுக்கிக் கொள்ளுங்கள்.
- ஒருவர் வீட்டுக்குள் அத்துமீறி நுளைந்து விட்டால் மிளகாய்த் தூளை எடுத்து உங்கள் மீது படாதபடி அவரின் கண்ணுக்குள் வீசுங்கள். உரத்தரகுரலில் சத்தமிடுங்கள்.
- உங்கள் மனம் ஒருவர் மீது பாய்வதைத் தெரிந்தால் அவர் களுடன் பழகுவதைத் தவிருங்கள்.
- உங்கள் மனதை தடுக்க முடியாமல் இருப்பின் பெற்றோருக்குத் தெரியப்படுத்துங்கள்.
- அதில் வெட்கமோ தப்போ கிடையாது.
- மன ஈர்ப்பு விசையால் இன்னொருவருடன் பெற்றோருக்குத் தெரியாமல் ஓடிச் செல்லாதீர்கள்.
- பெற்றோர் சேர்த்து வைக்கும்வரை பாலியல்தப்புச் செய்யாதீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒருவர் உங்களைத் தொடர்கின்றார் என்றால் உங்கள் பாணியை மாற்றிக் கொள்ளுங்கள்.
- செல்லும் இடங்களில் தனித்து ஒருவருடன் நிற்பதையோ, பேசிக்கொண்டு நிற்பதையோ, அவருடன் சேர்ந்து செல்வதையோ தவிருங்கள். உங்கள் உடலில் விரும்பத் தகாத இடங்களாகிய நெஞ்சுக்குக்கு மேல், நெஞ்சில், ஆண், பெண் உறுப்பிருக்கும் இடங்கள் இடுப்பின் கீழ் பக்கம் போன்ற இடங்களில் தொட்டால் அவரை வெறுங்கள். விலகிச் செல்லுங்கள். அந்த விடயம் தொடர்பாக பெற்றோருக்குத் தெரியப்படுத்துங்கள்.
- மாம்பழம் தருவேன், சட்டை தருவேன், பணம் தருவேன், சையிக்கிள் வாங்கித்தருவேன் என்று கூறி உங்களை அணுகுபவரை அறவே வெறுத்திடுங்கள்.
- நீங்கள் ஆசைப்பட்ட அற்ப பொருளுக்காக அவர்கள் தரப்போகும் அன்றி தந்துவிட்ட பொருளுக்காக உங்கள் உடம்பைத் தொடவிடாதீர்கள்.
- அறிமுகமற்ற ஆண் பெண் மற்றும் முதியவர் போன்றோருடன் பேசவோ, கண்ணோடு கண் பார்ப்பதையோ தவிருங்கள்.
- பள்ளிக்கூடம், வைத்தியசாலை, கழிவறைகள், ஆலயங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் கயவர்கள், காமுகர்கள் இருப்பர். அதனால் எங்கும் தனித்துச் செல்லாதீர்கள்.
- கழிவகற்றுவோர், சாரதிகள், காவலாளிகள், பிச்சை எடுப்போர் போன்ற தொழிலாளர்களையும் நம்பாதீர்கள்.
- மாமா என்று உறவற்ற அன்னியரை அழைத்திடாதீர்கள்.
- கைத்தொலைபேசிகள் பாவிப்பதை தவிருங்கள். உங்கள் வீட்டுத் தொழிபேசி இலக்கத்தை எவருக்கும் கொடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 02

## 2.1 காமுகர்கள் தம்மை இனம் காட்டும் நடத்தைக் கோலங்கள்

பாலியல் குற்றம் செய்ய முனையும் ஒருவரின் செயலை முற்கூட்டித் தெரிந்து கொள்ள அவரின் கண்களின் பார்வை, பேசும்மொழி, உடல் லாவண்யம், நெருங்கும் தன்மை போன்றவற்றை உற்றுநோக்கி எம்மை நாமே தப்பிக்க வைக்கலாம். அவற்றைத் தெரிந்து கொள்வதற்கான வழி முறைகளை ஒவ்வொரு பிள்ளையும் தெரிந்திருத்தல் அவசியம்.

காம உணர்வுகளின் புற வெளிக்காட்டல்கள் ஒவ்வொரு மனிதருக்கும் வேறுபட்டும் ஒன்றித்தும் காணப்படும். அவை அவர்களின் பாலியல் ஊக்கியின் தன்மைகளைப் பொறுத்தது. அந்த வகையில் அவர்களை மென்மையாக அணுகு பவர்கள், கண்டதும் காதல் கொள்பவர்கள், உயர்அதிகாரிகள், மந்திர தந்திரகாரர், போதிக்கும் சமயப் பெரியார்கள் என ஐந்து வகையாகப் பிரிக்கலாம். இத்தகையவர்களின் பாலியல் குறிகாட்டிகள் பின்வருமாறு தென்படும்.

### 2.1.1

**வகை– 1:–**

**மென்மையாக அணுகுபவர்கள்**

- முன்பின் தெரியாதவராயிருந்தும் உங்களைப்பார்த்து சிரிப்பர்.
- அடிக்கடி உங்கள் கண்ணுக்குத் தெரியும் படி நடமாடுவர்.
- நீங்கள் செல்லுமிடங்களை நாடி வருவர்.
- நெருங்கி வந்து உங்களிடம் கதை கேட்பர்.
- உங்களிடம் அதிக விருப்பம் தனக்கென்பர்.
- உங்கள் அழகு தன்னை மயக்குது என்பர்.
- உங்களைப் பார்ப்பதற்கென்றே அலைந்து திரிவர்.
- பேருந்தில் நீங்கள் பயணம் செய்தால் திடீரென தானும் ஏறி பயணிப்பர். அருகில் நெருங்கி நிற்பர்.
- முகவரி கேட்பர்.
- உங்களின் சாதாரண விடயத்துக்கெல்லாம் உதவ முன் நிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடிதம் நீட்டுவர்.
- வீட்டை கண்டுபிடித்து அப்பகுதியில் நடமாடுவர்.
- தன்னை அலங்கரித்து வாசனையூட்டியிருப்பார்.
- நல்லவர் போல் நடமாடுவார்.
- நீ இல்லாவிட்டால் இவ் உலகமே தனக்கு இல்லை என்பர்.
- தான் அழைக்கும் இடங்களுக்கு வரும் படி அழைப்பர்.
- பரிசுப்பொருளும் நீட்டுவர்.
- ஒழுக்க சீலர்களாகவும் தம் நடை உடை பாவனையைமெரு கூட்டுவார்.

**2.2.2**

**வகை –2 :–**

**கண்டதும் காதல் கொள்பவர்களின் அணுகுமுறைகள்**

- கண் வெட்டாமல் உங்களைப் பார்ப்பர்.
- சிலருக்குக் கண்கள்சிவந்திருக்கும்.
- சிலர் வளிமுஞ்சியாய் பேயன், பித்தன் போல் கீழ்படிவுள்ளவர் போல் பின் தொடர்வர்.
- அப்பாவிச் சிரிப்பைக் காட்டுவர்.
- கண்களை பார்ப்பதும் குனிவதுமாய் இருப்பர்.
- கண்களில் போதை மயக்கத்தை வெளிக்காட்டுவர். வெறிகொண்ட உற்றுநோக்கல் பார்வை பார்ப்பர்.
- நாக்கை நீட்டிக்காட்டுவர்.
- கண்ணடித்துக் காட்டுவர்.
- தன் வீர கம்பீர நடை மற்றும் செயல்களைக் காட்டுவர்.
- சிலரைப் பக்கத்தில் சேர்த்து நடமாடுவர். ஆண்கள் சிலர் தம் மீசையை வீரகம்பீரமாக அலங்கரித்திருப்பர்.
- வெருட்டும் கோபப் பார்வை பார்ப்பர்.
- பெரிய குரலில் மற்றவருடன் பேசுவர்.
- தன்னைப் பணக்காரராகவும், காரியகாரனாகவும், வசதி வாய்ப்பானவனாகவும் பேச்சிலும் செயலிலும் காட்டுவர்.
- காமத்தைத் தூண்டும் வார்த்தைகளை உங்களை நோக்கிப் பேசுவர். மறைத்த இடத்தைத் திறந்து காட்டுவர்.
- உன்னைத் தவிர வேறு எவருக்கும் தன்னில் இடமில்லை என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேறு எவரையும் உன்னை நெருங்க விட மாட்டேன் என்பர்.
- பணம் வேணுமா? வசதிவாய்ப்புக்கள் வேணுமா? பதவி, பட்டங்கள் வேணுமா? என்பர்.
- சம்மதித்தால் எல்லாமே கிடைக்கும் என்பர்.
  வீட்டில் வந்து பெற்றோருடன் பேசு என்றால் தயக்கம் காட்டுவர்.
- கைத் தொலைபேசி இலக்கம் கேட்பர்.
- மிகவும் அன்பாகவும் இனிமையாகவும் கவர்ச்சிகரமாவும் பார்த்துக் கொண்டிருப்பர்.
- உங்களைத் திருமணம் முடிப்பேன் என்பர்.
- பேசும் போது பாலியல் புதினங்களைப் பேசுவர்.
- பகிடிக் கதைகளைப் பாலியலுடன் இணைத்து வித்துவமாகக் கதைப்பர்.
- சில வயதான ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமியரை தனிப்பட அழைத்து அவர்களின் உடம்பை வருடி உணர்வு களைத் தூண்டி இரசிப்பர்.
- உங்கள் அழகை வர்ணிப்பர். பார்க்கும் இடம் எல்லாம் நீதான் என்பர்.
- சிலர் கூட்டமாக நண்பர்களுடன் சேர்ந்து வந்து காமச் சேட்டைகளைப் புரிவர்.
- பெண்கள் தாமில்லாமல் வாழ முடியாது என்பர்.
- நடிகைகளைப் போல் இருக்கிறீர் என்பர். ராசாத்திபோல் வைத்திருப்பேன் என்பர். அன்பே, செல்வமே, இராசாத்தி,என்ற வார்த்தைகளால் அழைப்பர்.
- திரைப்படப் பாணியில் காதல் வசனங்கள் பேசியும் பாடல்கள் இசைத்துக்காட்டியும் கவருவர்.
- தன் பரம்பரைப் பெருமைகளைப் பேசுவர்.
- நீ எப்படி தன்னை மயங்க வைத்தாயோ என்பர்.
- பாலியல் படங்களைக் காட்டுவர்.
- பெண்களின் மார்பகங்களை அடிக்கடி பார்த்துக் கதைப்பர்.
- பேருந்தில் பெண்கள் இருக்கையில் இருக்கும் போது பெண்ணிற்கு பின் புறமாக கை போடுவர்.
- பேருந்தில் (பஸ்சில்) இருக்கைக்கு இடமில்லாதபோது, இருக்கை யில் பயணப்பை வைத்திருப்பர். இளம்பெண் அருகே வந்ததும் பயணப்பையை எடுத்து பெண்ணுக்கு இருக்கையில் இடம் கொடுப்பர். அதில் இருந்து பயணிக்கும் போது காலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதிப்பர். துடையில் தடவுவர். உடம்போடு நெருங்கி இருப்பர்.

- நாளை சந்தித்த இடத்திற்கு வரும்படி அழைப்பர்.
- அச்சமின்றி கையில் தொட்டுக் கதைப்பர்.
- நீங்கள் நடந்து வரும் பாதையை அவதானித்து விட்டு அடிக்கடி வாகனத்தில் வந்து உங்களை வீட்டில் இறக்கி விடுகிறேன் என்பர்.
- நீங்கள் மறுத்தால் அடிக்கடி வாகனத்தை நிறுத்தி நிறுத்தி உங்களை அழைப்பர்.
- நீங்கள் அடிக்கடி சந்திப்பவர், அப்பா, அண்ணனுக்குத் தெரிந்தவர் என்று எண்ணி வாகனத்தில் நம்பி ஏறினால், உங்கள் வீடு போகும் பாதையில் போக மாட்டார். வேறு வழியில் வாகனத்தைச் செலுத்துவர்.
- ஏன் என்று கேட்டால் இவ்வழியாலும் போகலாம் என்பர்.
- அவர் தான் நினைத்த இடத்திற்கு உங்களை அழைத்துச் சென்று உங்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிவர்
- பாலியல் துஷ்பிரயோகிகள் எவ்வளவு அழகானவர்களாக இருப்பினும் அருவருப்பானவர்கள் போல் தென்படுவர்.
- சமூகத்தில் நல்ல பெயரும், புகழும் நல்ல பதவியும் உடையவர்களும், பாலியல் துஷ்பிரயோகிகளாகவும்இருப்பர்.
- நெரிசலான இடங்களில் விலத்திச் செல்லும் போது தம் உடம்பை அழுத்தி உரஞ்சிச் செல்வர்.
- கன்னங்களில் தட்டும் போது அழுத்தித் தட்டுவார்
- பின் இடுப்பு, மேல்நெஞ்சு, நெஞ்சின் நடுப்பகுதி, ஆண் பெண் உறுப்பிடங்களில் தட்டுவர். தட்டும் போது உணர்வுகளைத் தூண்டும் விதத்தைக் கையாள்வர்.
- பேரூந்தில் இருக்கும் போதும் நிற்கும் போதும் கால் மீது தன் காலை வைத்து மிதிப்பர்.
- வாகனம் நிறுத்தும் போது சிலர் வேணுமென்றே உடம்பு மீது சாய்வர்.
- கைகளால் தீண்டும் போது சிலர் உணர்வுகளைத் தூண்டக்கூடிய தொடுகைகளைத் தொடுவர்
- பெண்களின் இடுப்புப்பகுதியை பார்த்த வண்ணம் இருப்பர். சிலர் இடுப்பைக்கிள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.2.3**

**வகை–3 :–**

## உயர் அதிகாரிகளின் அணுகுமுறைகள்

- சிலர் தன் பதவியையும் அந்தஸ்தையும் உயர்த்திக்காட்டுவர்.
- அதிகாரப் பேச்சுப் பேசுவர்.
- ஏன் என்று கேட்காமல் அலட்சியமாய் இருப்பர்.
- நீங்கள் வலியப் போய் தன்னைப் பயந்து நெருங்க வைப்பார்.
- நீங்கள் கேட்கும் விடயம் பாராதுரமானது, செய்வது சரியான கஷ்டம் என்பார்.
- உடனடியாகச் செய்யமுடியாது என்பார்.
- நாளைக்கு வரச் சொல்லுவர்.
- அடிக்கடி தன்னை சந்திக்கச் சொல்லுவர்.
- தொலைபேசிஇலக்கம் தருவர்.
- அவருக்கு முன் இருக்கும் போது தன் காலால் உங்கள் காலைத் தடவுவர்.
- பேசும்போது பெண்களின் அங்கங்களைப் பார்த்தே பேசுவர்.
- நாட்குறிப்பிட்டு இந்த நாள் வாருங்கள் தான் தனிமையில் தான் இருப்பேன் என்பர்.
- உங்கள் வீட்டிற்கு வருவேன் என்பர்.
- உங்களுக்காக எதையும் செய்வேன் என்பர்.
- நீங்கள் இசையாவிடில் கடுமையாக வெறுப்பர். எக்காரியத்தையும் செய்து தரமாட்டார்.
- வாய்க்கு வந்தபடி எல்லாம் பேசுவர்.
- தான் அக்காரியத்தைச் செய்வதில் எவ்வளவோ கஷ்டம் இருப்பதாகக் கூறுவர்.
- தன் மனைவியிலும் உங்களில் தான் விருப்பம் என்பர்.
- தூர இடங்களில் உள்ள அலுவல்களைத் தானும் சேர்ந்து வந்து செய்து தருவேன் என்பர்.
- தானே செலவைப் பொறுப்பேன் என்பர்.
- ஒரு அறையில் தங்கலாம் செலவில்லை என்பர்.
- உணவுப் பொருட்களை வாங்கித்தருவார்.
- விடுதியில் நல்ல சாப்பாடு சாப்பிட வரும்படி அழைப்பர்.
- யாரையும் உதவிக்குக் கூட்டிவர வேண்டாம் என்பர்.
- தம் பாலியல் திருப்தி இன்மையை கூறுவர்.
- பாலியலின் மகத்துவத்தைத் தெரியப்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உங்களைப் பார்த்ததிலிருந்து நீங்கள் தான் பார்க்குமிட மெல்லாம் என்பர்.
- தன் மதிப்பை அதிகாரிகள், அமைச்சர்களுடன்பேசுவதுபோல் தொலைபேசியில் பேசுவர்.
- அவர்களிடம் உங்களையும் அறிமுகப்படுத்துவேன் என்பர்.
- தான் சொல்பவற்றை எல்லாம் அவர் செய்வார் என்பர்
- லீவு நாட்களில் குறித்த இடத்தில் தன்னைச் சந்திக்க வரும்படி கூறுவர்.
- திண்பண்டங்கள், இனிப்பு போன்றவற்றில் போதை மருந்து கலந்து உங்களுக்கு உண்ணத் தருவர்.
- குடி பானம் தயார்ப்படுத்தி வைத்திருப்பர். அதில் மயக்க மருந்தும் கலந்திருப்பர்.
- பானத்தைக் குடித்ததும் நீங்கள் மயங்குவீர்கள். மயங்கியதும் உங்கள் மீது வல்லுறவைப் புரிவர்.
- தன் மனைவி பிள்ளைகள் தன்னை மதிப்பதில்லை என்பர்.
- தொலைபேசியில் பாலியல் வசனங்கள், பாலியல் படங்களை அனுப்புவர்.
- பாலியல் படங்களை பார்க்க வரும்படி அழைப்பர்.
- கண்ணாடியற்ற சாத்திய கதவிற்குள் பணியாற்றுபவர்கள் பெண்களிடம் எதைக் கேட்பினும், எதைச் செய்யினும் பயப்படார்.

## 2.2.4

### வகை –4 :–

### மந்திர தந்திரக்காரர்களின் அணுகுமுறைகள்

- நோய் பிணியில் சிக்குண்டவர்களுக்குத் தன்னில் நம்பிக்கையூட்ட பல பேய் ஓட்டும் வித்தைகளைச் செய்வர்.
- அதிக செலவு வரும் என்பர். அச் செலவை உங்களுக்காகக் குறைத்துச் செய்வேன் என்பர்.
- கூடிச் சென்றவர்களை வெளியில் விட்டு பெண்ணை மட்டும் தன் அறைக்குள் வரும்படி அழைப்பர்.
- பெண் மீது தான் புரியும் சேட்டைகள் தெய்வத்தின் கட்டளை என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உணர்வுகளைத் தூண்டக்கூடிய மந்திர சாலத்தைத் தன்னில் காட்டி மனதை மயக்குவர்.
- சிலர் இறைவன் சாயலாகத் தன் தோற்றப்பாட்டைக் காட்டி வசீகரிப்பர்.
- உங்களில் பேய் பிடித்து விட்டது என்பர்.
- குழந்தாய், பெண்ணே! என்ற லாவண்ய மொழிகளால் அழைப்பர்.
- உங்கள் மீது உருவேற்றுவர். நீங்கள் ஆட உங்களைத் தொட்டு அடக்குவது போல் தொடுவர்.
- மந்திர தந்திரக்காரர் தன்னை ஓர் முனிவர் போல் சடையை வளர்த்து முடியை உயர்த்தி முடிவர். காவிஉடை, குங்குமம், வீபூதி அணிந்து, கழுத்து நிறைய உருத்திராட்ச மாலை வேறு மாலைகளும் அணிவர்.
- கண்களால் மயக்கிடும் பார்வையை வீசுவர்.
- வைத்த கண் வாங்காமல் பார்ப்பர்.
- மந்திரத்தை உரத்துச் சொல்லி விபூதி வீசுவார்.
- உடம்பில் தொட்டு சடங்குகள் செய்வர்.
- தன்னில் தேவதை வந்தது போல் உங்களைப் பிடித்து உலுக்குவர்.
- தன் சேட்டைகள் எல்லாம் தன் தெய்வத்தின் செயல் என்பார்.
- தன் சேட்டைகளுக்கு இணங்காவிடின் உன் பேய்கள் உன்னை விட்டு விலகாது என்பர்.
- மேலும் நோய்கள், மன மயக்க நிலையை அதிகரிக்கச் செய்து விட்டு அங்கே தங்கும் படி கூறுவர்.
- காய் வெட்டி கழிக்க வேண்டும் அடிக்கடி வரும்படி கூறுவர்.

**2.2.5**

**வகை– 5:–**

**போதிக்கும் சமயப் பெரியார்களின் அணுகுமுறைகள்**

- கடவுளின் குணாதிசயங்களை தன்னில் வெளிக்காட்டுவர்.
- அன்பு, கருணை, காருண்யத்தை காட்டுவர்.
- உதவும் கைங்கரியத்தை செய்வர்.
- பாடல்கள், அலங்கரிப்புக்கள், அறநெறிகள், தியான ஒடுக்கங்கள், பஜனைகள் போன்றவற்றிற்கு அழைப்பர். அதில் ஒரு சிலரை பிரத்தியேகமாக அழைப்பர்.
- தன்னில் மென்மைத் தன்மையை உருவகித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி செயல்களைப் புரிவர்.

- அடுத்த அடுத்த நாட்களும் வரும்படி அழைப்பர்.
- தனி அறைக்குள் அழைத்து அன்புடன் அரவணைத்து காமச் சேட்டைகள் புரிவர்.
- கடவுளின் குணங்களைச் சொல்லிச் சொல்லியே பாலியல் சேட்டைகள் புரிவர்.
- தமது பேச்சு வன்மையால் கவர விளைவர்.
- கடவுளைக் காட்டுவேன். ஆச்சிரமத்தில் தங்கும்படிகேட்பர்.
- ஆச்சிரமத்தில் சிறு சிறு குடிசைகள் அமைத்துபிராத்தனைகள், போதனைகள் நடத்துவர்.

## 2.2 ஏமாற்றும் காமுகர்களின்தந்துரோபாய ஓர் அணுகுமுறை

சின்னஞ் சிறுசுகளே! நீங்கள் குழைந்தைகள். பாலியலைப் பற்றியோ காமுகர்களின் பாலியல் உத்திகளையோ அறியாதவர்கள். வயதிற்கு மூத்தவர்கள் (ஆண், பெண்) உங்கள் பெற்றோர்களைப்போல் நல்லதையே செய்வர் என நம்பும் பருவத்தில் நீங்கள். உங்கள் பருவத்தில் ஆசிரியர்களையும், வைத்தியர்களையும் சகோதரர்கள், உறவினர்கள், மாமன், பேரன், பூட்டன், முதியவர், அப்பாவின் நண்பன், கோயில் பூசாரி, குருக்கள், பங்குத்தந்தையர் என்ற நிலையில் பற்பலர் உங்களுக்கு உதவுவர். அப்படிப்பட்டவர்களில் சிலர் உங்களைத் தம் இச்சைக்கு வசைப்படுத்துவதற்காக பல விதத்தில் செயற்படுவர்.

- பரிசுப்பொருட்கள், தீன்பண்டங்கள், குளிர்பானம்,உடைகள் போன்ற பல்வேறு பொருட்களை கண்ட இடத்திலோ அன்றி வீட்டிற்கு வந்தோ முதலில் வாங்கித்தருவர்.
- அடிக்கடி உங்கள் வீட்டிற்கு வந்து உங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அன்புடன் பழகுவர். அடிக்கடி உங்கள் பெயர் சொல்லி அழைப்பர்.
- பெற்றோரும் அவரின் நடைத்தைக்கு காரணத்தை அறியாமல், அவருக்கு உங்களில் விருப்பம் என்று கவனிக்காமல் விட்டு விடுவர்.
- நீங்கள் சிறு பிள்ளைகள் முதியவர்கள் சேட்டை விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை பெற்றோர்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை, தன் சேட்டைகளை இனங்கான முடியாதவர்கள சிறுவர்கள் என்பது அவர் நினைப்பு.

+ நாளடைவில் உங்களைத் தன் மடியில் இருத்துவர்.
+ மடியில் இருக்கும் போது உங்கள் உடம்பைத் தடவுவர்.
+ உங்களினதும் பெற்றோரினதும் நம்பிக்கையைத் தான் பெற்றுக் கொண்டதும், உங்களைக் கடைக்குக் கூட்டிச் சென்று விருப்பமான பொருட்களை வாங்கித் தருவர்.
+ படத்திற்கும் கோயில் விழாக்களுக்கும் கூட்டிச் செல்வர். நீங்களும் அவர் நடத்தையில் கள்ளம் இல்லை என்று நம்பி நடப்பீர்கள்.
+ அடுத்த நாட்களில் உங்களை அவர் வெளியில் தனியே செல்ல அழைப்பர். நீங்களும் போகும் இடம் தெரியாமல் செல்வீர்கள். எங்கே போகிறோம் என்று கேட்காமலே செல்வீர்கள். அவ்வளவு நம்பிக்கை அவர் மீது உங்களுக்கு.
+ அந்த இடம் தனி இடமாக இருக்கும். எவருமே அங்கு இருக்க மாட்டார்கள். காடு, பற்றைகள், தனி அறை, ஒதுக்கப்புறமான இடங்கள் போன்றவற்றிற்கு அழைத்துச் செல்வர்.
+ அப்போதும் நீங்கள் அவரில் நம்பிக்கையுடன் செல்வீர்கள்.
+ அதில் உங்களின் ஏமாற்றம் மறைந்திருக்கும். பெற்றோரின் நம்பிக்கையில் தப்பு கலந்திருக்கும். அவனின் கபடத் தனத்தில் வெற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும்.
+ மறைவிடத்தில் உங்கள் இருவரையும் காண்பதற்கு யாரும் இருக்கமாட்டார்கள்.
+ அப்போது அவர் உங்களை முத்தமிடுவர்.
+ கட்டி அணைப்பார்.
+ உடம்பின் மறைப்பிற்குரிய இடங்களின் உடைகளைக் களைவர்.
+ தன் கைகளால் உங்கள் உடம்பை வேதனைப் படுத்துவர்
+ அதன் பின் அவரின் சேட்டைகளிலிருந்து உங்களை விடுவிக்க உங்களால் முடியாது.
+ குரல் எழுப்பிக் கத்தவேண்டும். கத்தினாலும் உங்கள் வாயை மூடி குரல் வெளிவராமல் அடக்கி விடுவர்.
+ குரல் கேட்டு ஓடி வந்து காப்பாற்றவும் சில இடங்களில் ஆட்கள் இல்லாமலும் இருக்கலாம்.
+ நீங்கள் மீளவும் முடியாமல் உதவிக்கு எவரையும் அழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும் முடியாமல் உங்கள் உடம்பு அசிங்கப்பட்ட நிலையில் நீங்கள் வேதனைப்படுவீர்கள்.

- நடந்ததை யாரிடமும் சொல்லக்கூடாது என்பர்.
- வேறு யாரையும் செய்ததாகக் கூறச்சொல்லுவர். செய்வது தெரியாமல் நீங்கள் அவருக்கு பின் வந்தாலும் அவர் இடை நடுவில் விட்டுவிட்டுச் சென்றுவிடுவர்.
- தான் செய்தவற்றைச் சொன்னால் உங்களைச் கொலை செய்வேன் என்பர்.
- தன்னை இக்குற்றச் செயலில் இருந்து தப்பிக்க உங்களை இல்லாமலும் செய்து விடுவர்.
- இவர் போல் பலவிதத்தில் பலர் செயல்படுவார்.

## கற்பு

கற்பு என்பது ஆண், பெண் இருபாலாருக்கும் உரிய உயர்ந்த ஒழுக்க நெறி. அது உயரிய பாலியல் முனைப்பு. ஒருவன் ஒருத்திக்கு மட்டும் உரியது. பிறர் தீண்ட முடியாதது. விசுவாசமானது. அன்பின் இறுக்கத்திற்கு உரியது. தெய்வீகத்திற்கு உரியது. தெய்வம் குடிகொள்வது. வெல்லக்கூடியது. அசைக்க முடியாதது. களங்கமற்றது. மிக மிகத்தூய்மையானது. வாழ வைப்பது. மதிக்கப்படுவது. நிமிர்ந்த பார்வைக்குரியது. ஆனித்தரமானது. காவியம் ஆக்குவது

*கண்*

*ஒருமனிதனின் கண் அவரின் மன நிலையைக் காட்டும் கண்ணாடி. அதில் காதல் பார்வையையும், காமப் பார்வையையும் நல்ல பார்வையையும் கெட்டபார்வையையும் வேறு பிரித்துக் கண்டு கொள்ளலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 03

## 3.1 பெண்களி

ஒருவர் வேறு எதையும் இழந்தால் அந்த சோகத்திலிருந்து சிறிது காலத்துக்குள் மீளலாம். தன் உடலுக்குப் பாலியல் கேடு விளைந்தால் அத் துன்பத்தில் இருந்து இறக்கும் வரை மீள முடியாது. காதல் தெய்வீகம் என்றால் நன்மை. உங்கள் காதல் தெய்வீகம் என்பதை அறிய முடியாத பருவம் உங்கள் பருவம். பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற நான்கு குணங்களையும் இயற்கையாக கொண்டவர்கள். அவர்களின் உடலும் உள்ளமும் அவற்றின் செயலைப் பிரதிபலிக்கின்றது. தொட்டால் சுருங்கிச் செடி மனிதனின் கை பட்டதும் அதன் அத்தனை இலைகளும் ஒடுங்கிப் போய்விடும். இத் தொட்டாற் சுருங்கியின் நிலை போன்றதே ஒரு பெண்ணின் நிலையும். நெருங்கிப் பழகும் சில ஆண்களின் விரல்கள் பட்டாலும் தொட்டாற் சுருங்கிபோல் உணர்ச்சிவசப்படும் நிலையை அடைந்து விடுவர். எனவே ஆண்களின் தொடுகை ஏற்படமாலிருக்க ஆண்களுடன் பழகுவதைத் தவிர்த்தல் மிகமிக அவசியம்.

இந்தநிலையினை மீறும் சந்தர்ப்பத்தில் நீங்கள் இலட்சியம் கொண்டு காப்பாற்றி வந்த கற்பையே நேரம், காலம், தெரியாமல் இழக்க வேண்டிய நிலை தேன்றலாம்.

சிறுவர்களுக்கு பாலியல் உறவால் கர்ப்பம் தங்கும் என்ற நிலை தெரியாத விடயமாகும். இதனால் இப்பருவத்தினர் அடையும் துன்பத்தை துடைக்க எவராலும் முடியாத நிலை தோன்றும். இந்த விடயம் தெரிந்த பெண்கள்கூட சந்தர்ப்ப சூழ்நிலையால் உடல் உறவில் ஈடுபட்டு கர்ப்பம் தரித்து துன்பம், அவமானம், போன்றவற்றால் வேதனைப்பட்டிருப்பதை எம் மத்தியில் காண்கின்றோம். இந்நிலை உடல் தொடுகைகளுக்கும் வார்த்தை மயக்கங்களுக்கும் மனம் இடம் கொடுத்ததன் விளைவு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் மலர்களுக்கு ஒப்பானவர்கள். எனவே அவர்கள் நெறி தவறாமல் இருக்கவும் கயவர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அறிவுரைகளைப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லி வைத்திருத்தல் வேண்டும்.

பெண்ணைத் தெய்வமென வழிபட்ட அன்றைய சமூகம் தான் அவளை அந்நிலைக்கு உயர்த்தியது. இன்று அத் தெய் வத்தை அரும்பிலும், மொட்டிலும், பூவிலும் பிஞ்சிலும் கசக்கிப் பிளிந்து, மனிதம் கடந்த நிலையில் பெண்ணை அசிங்கப்படுததிச் சீரழிப்பதைக் காண்கின்றோம். இச்செயலை எந்த மானிடனும் பொறுத்துக் கொள்ளாத நிலை மனித சமுதாயத்திலிருந்து எழுதல் வேண்டும். அறிவியலும் சமய சிந்தனைகளும் உச்ச வளர்ச்சியடைந்த நிலையில், இத்தகைய பாலியல் கொடுமைகள் நிகழ்வதற்குரிய சூழ்நிலைகளையும் சூத்திரதார உத்திகளையும் இனங்காணுதல் அவசியம். அது காலத்தின் கட்டாய விடயமாகும்.

பெண் பிள்ளைகளின் உடல், உள அமைப்பை அழகு மிக்கதாகவும், மென்மையானதாகவும் இறைவன் ஆக்கிவைத்தான். அவை அனைவரையும் கவரத்தக்கதாகவும் வடிவமைத்தான். பெண்ணுக்கு ஆண்களைப்போல் பலத்தைக் கொடுக்காமல் விட்டுவிட்டான். இவற்றின் விளைவே பாலியல் துஷ்பிரயோகம்.

இருந்தும் எம்மை நாம் காப்பாற்ற எமக்கு இறைவன் பகுத்தறியும் மூளையைக் கொடுத்திருக்கின்றான். அதனால் பெண்கள் தற்பாதுகாப்புப் பயிற்சிகளைக் கற்றிருப்பதோடு, ஆண் களின் பாலியல் கபடச் செயல்களையும் அறிந்து, அக்கபடத் தனத்திற்குள் சிக்காமல் தம்மைத் தாம் தப்பிக்க வைக்க வேண்டும். அத்துடன் தன்னில் தோன்றும் எதிர்ப்பால் ஈர்ப்பினை யும் கட்டுப்படுத்த, தன் மனதைச் சமநிலைப்படுத்தல் அவசியம். அப்படியானால் இப்பூமி பெண்களுக்கு இன்ப மயமானதாக அமையும்.

பாலியல் கயவர்களிடமிருந்து பெண்கள் தம்மைத் தாம் காப்பாற்றிக் கொள்ள மேற்காட்டிய விடயங்களோடு, தன்னுடைய நடை, உடை, பாவனைகளை அடக்கத்தோடு கடைப்பிடித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அளவிற்கு அதிகமான ஆடம்பரத்திற்கும், வசதி வாய்புக்களுக்கும் ஆசைப்படுவதை விடுத்து, பணம், பதவி, பட்டங்களை நேர்வழியில் பெற்றுக்கொள்ள தன்னை வசப்படுத்திக் கொள்ள வேண்டும். போதும் என்ற மனம் ஒரு பெண்ணுக்கிருந் தால் அவளுக்கு இல்லாதது என்று இவ்வுலகில் எதுவும் இல்லை.

எந்தக் கஷ்ட நிலையிலும் ஆண்களை நாடி எந்த உதவி யும் கேட்காமல் தன் உழைப்பை மட்டும் நம்பி அளவோடு வாழ பெண்கள் துணிவு பெறுதல் வேண்டும். அதற்காக கல்வியே மூல தனம் என்று கல்வியைக் கற்று உயர வேண்டும். (நல்லவள் என்று கேட்க பல காலம் செல்லும். கெட்டவள் என்று கேட்க ஒரு நொடிப் பொழுது போதும்.) ஒரு கணப்பொழுது தவறாகினால் பல யுகம் துடித்து வாழும் நிலை பெண்களுக்கேற்படாமல் இருக்க எச்சந் தர்ப்பத்திலும் பாலியல் தவறான நடத்தைக்கு உடந்தை யாகாதீர்கள்.

"நிமிர்ந்த நல்நடையும் நேர்கொண்ட பார்வையும் ஞானத் தில் எவருக்கும் அஞ்சா நல்நெஞ்சமும்" கொண்ட பெண்ணாக ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தான் நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக அந்நிலையை பெண்கள் அடைய ஆண் வர்க்கம் தன் உடல், உளத் தூண்டுகைகளைக் கட்டுப்படுத்தி, பெண்களை உயர்த்த உழைக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணை யும் மதிக்கவும் பாதுகாக்கவும் ஒவ்வொரு ஆணும் திடம் கொண்டு ஒன்றிணைய வேண்டும்.

**"நாம் ஒவ்வொருவரும் தாயின் (பெண்ணின்) வயிற்றுக்குள் இருந்தே உருவானோம். தாயுண்ணும் உணவையே உறுஞ்சி உண்டோம். தாயின் சிந்தனை மூலம் அறிவைப் பெற்றோம். அவளின் வயிற்றுக்குள் ஊர்ந்து விளையாடினோம். எம் தாயே பூமிக்கு எம்மை வெளிக் காட்டினாள். தாயின் மார்பு வழிவந்த அவளின் இரத்தத்தைப் பாலாய் பருகினோம். அவளின் தாலாட்டைக் கேட்டு இனிதாய்த் தூங்கினோம்"**

**இத்தகைய பெண்மையை பிறப்பின் மூலத்திலிருந்தே தொட்டு உணர்ந்து இரசித்து நேசித்து புசித்து மகிழ்ந்து, வளர்ந்து வந்த வரலாறு கொண்ட மனிதன், ஏனைய பெண்களைக் காமக்கிளத்தியாக நோக்கி அவளை நோகடிப்பது ஏன்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 அறிவுரை

பெண் பிள்ளைகளின் அழகும் மென்மையும் அவர்களின் அலங்காரச் செயல்களும் பெற்றோரை அதிகமாகக் கவரும். அவர்கள் தம்பிள்ளைகளை வயதிற்கு வந்த பிள்ளைகளைப்போல் அலங்கரித்துப் பார்ப்பதில் விருப்பம் காட்டுகின்றனர். இத்தகைய அலங்கரிப்பு இளைஞர்களின் மனஊர்ப்பைக் கவர வாய்ப்பளிக் கின்றது.

சிறு பெண்பிள்ளைகளுக்கு தலைமுடி நீண்டிருக்கும் போது அவர்கள் பெரியபிள்ளைகள் போன்ற தோற்றப்பாட்டைக் கொடுக் கும். அவர்களின் முடியை படிக்கும் வரை குறைத்து விடுதல் நன்மை பயக்கும். எமது கலாசாரத்திற்கு ஏற்ற உடைகளை விரும்பி அணியும் மனப்பாங்கை பெற்றோர்கள் பிள்ளைகளி டத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இவை மட்டுமல்ல சிறு பிள்ளை தானே என்று குடும்பத்தவர் மற்றும், உறவினர் போன்றோருடன் தனியே விட்டு தாய் வெளிநாடு அன்றி வெளியிடம் செல்வதினால் பிள்ளை களைப் பாதுகாப்பற்ற ஏக்க நிலைக்கு உள்ளாக்கு கிறார்கள். இந்நிலைமைகளினால் பிள்ளை தப்பு விடவும், பிள்ளைகள் மீது மற்றவர் பாலியல் கொடுமை செய்யவும் பெற்றோர்கள் காரண மாகும் நிலைமை உருவாகலாம்.

வீட்டில் உள்ள உறவுகள் தப்பு விளைவிக்கும் நிலை தென்பட்டால் உடனடியாக எவருக்கும் அஞ்சாமல் பிள்ளையை அவ்விடத்தை விட்டு விலக்கிக் கொள்ளுங்கள். காமுகர்களிடமிருந்து பிள்ளையைக்காப்பற்ற முடியாதநிலை தோன்றினால் 1929 தொலை பேசிக்கு அறிவியுங்கள். தாய் இந்த விடயத்தில் தற்துணிவு உள்ள வராகப், பிள்ளையின் உடலையும் உள்ளத்தையும் காப்பாற்றும் பொறுப்பு மிக்க காவல் தெய்வமாகச் செயல்பட வேண்டும்.

**பாலியல் திருப்தி மட்டும் உன்னத வாழ்க்கை ஆகாது. புதுமைகள் படைப்பதில் காணும் இன்பம், குற்ற உணர்வின்றி வாழ்தலில் உள்ள மன நிறைவு வாழ்க்கையின் சுபீட்சம் எனலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3 மனிதா உன்னை நீ சிந்திப்பாயா?

ஒரு சிறுமியை ஒரு முதியவர் பாலியலுக்கு உட்படுத்தும் போது அவனது மனச்சாட்சியை அவன் கொன்று விட்டானா? தன் பிள்ளைக்கு அன்றி தான் ஒரு சிறு பிள்ளையாக இருப்பின் தனக்கு இந்நிலை ஏற்பட்டால் எப்படித் தாங்குவேன் என சிந்திப்ப தில்லையா?

மிருகங்கள் பறவைகள் கூட குழந்தையைப் பூப்போல் பார்ப்பதை இவர்கள் பார்க்கவில்லையா? பருவமடையாத தம் இன சிறுசுகளை, அவ் இன ஆண்கள் அத்துமீறி புணர்வதில்லை. பகுத்தறிவு கொண்ட மனிதர்கள் சிலர் தன் நிலை மறந்தவர் களாக செயல்படுவது மனித சமுதாயத்திற்கே இழுக்கு!

மனிதன் சிறு பிள்ளைகளுக்குச் செய்யும் சேட்டை மனித உரிமையை மீறிய கொடூரத்தின் கொடுமையாகும். அவனுக்குப் பகுத்தறிவைக் கொடுத்த கடவுளுக்கே வெட்கம். காமப்பசியர் வயதுக்கு வந்தவர்களுடன் நெருங்க முடியாத தன் கோழைத் தனத்திற்கும், தன் இயலாமைக்கும் சிறுவர்களைப் பலிக்கிடா ஆக்குவதைப் பொறுத்துக் கொள்ள முடியுமா?

கடத்திச் சென்று தான் கற்பழித்துவிட்டு, மற்றவர்களையும் கற்பழிக்க சந்தர்ப்பம் கொடுத்துப் பெண்ணைக் கொலை செய்து எறியும் காமுகர்கள் மனித வடிவில் நடமாடும் இயமர்களா?

இத்தகைய தகாத நடத்தைக்கும், கொலைக்கும் சட்டத்துக்குள் அகப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு அடி உதை வாங்கித் தூக்குத்தண்டனை பெற்று இறப்பதில் அவன் காணும் இன்பம் தான் என்ன? ஒரு கணம் தவறாகி இறக்கும் வரை அதை நினைத்து வருந்திச்சாவது எவ்வளவு கொடுமையானது என்பதை நினைத்துப் பார்ப்பார்களேயானால், தம் காம வெறியைக் கட்டுப் படுத்திக் கொள்ளலாமல்லவா.?

மனிதா! ஒரு கணம் நீ ஒரு பெண்ணைக் கற்பழித்ததனால் அவளின் எதிர் கால வாழ்க்கையை கண்ணீரில் மிதக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறாய். அது உனக்கு புரியவில்லையா? உன் தப்பான செயலால் அவளின் வயிற்றில் உருவான குழந்தை அப்பன் பெயரின்றி அவமானப்படும் என்பதை நினைக்காதவனா? அப் பெண்ணும் குழந்தையும் பாதுகாப்பற்றும் உண்ண உணவுமின்றி சமூகக் கணிப்பின்றி அலைந்து திரியும் என்பதை நீ உணராதவனா?

பெண் என்பவள் பூமித்தாய்க்கு ஒப்பானவள். அவளின் உயிர் உருவாக்கும் உடலமைப்பு புவியில் வித்துக்கள் முளைத்து பயன் தருவதற்கும் மேலானது. ஏனெனில் அவள் நடமாடும் உயிர்களை உருவாக்குபவள், பேசும், சிந்திக்கும் வல்லமை கொண்ட உயிர்களை உருவாக்கிக் கையளிப்பவள். பெண் என்பவள் பெருமூச்சு விட்டால் அவளைக் கெடுத்தவன் ஏழ் பிறப் புப் பிறந்தாலும் அவளின் பாவம் அவனைச் சூழும். அவ்வளவு சக்தி மிக்கவள் பெண் என்பதைப் புரிந்து கொள்தல் வேண்டும்.

பாலியல் குற்றச் செயல்களைத் தடுக்கும் சட்டங்கள் இருக்கின்றன. அவற்றைச் சரியாகக் கடைப்பிடித்தால் தவறுகள் விரைவாகக் குறைந்துவிடும். சின்னஞ்சிறு குழந்தையைக் கற்பழித் தவன் வெளியில் நடமாடுகின்றான். பிள்ளையோ சிறுமையின் எழுச்சிகளை இழந்து, அதன் துள்ளலை இழந்து, தவிப்பதை நினைத்துப் பாருங்கள். அவளின் எதிர்கால வாழ்க்கை இருளுக் குள் தள்ளப்பட்டிருப்பது தெரிகிறதா? அவள் ஒதுக்குப்புறத்தில் தன்னைத்தான் வெளிக்காட்ட முடியாமல் தவித்து நிற்பது தெரி கிறதா? அவளைப் பார்த்த உங்கள் மனம் தவிக்கவில்லையா? சீரழித்த காமுகர்களைப் பொறுத்துக்கொள்ள முடிகிறதா? சிறுமியு மில்லாமல் குமரியுமில்லாமல் வாழ்வு மில்லாமல் சிறுமிகள் அநியாயப்பட்டுக் கொண்டிருப்பதை இனியும் அனுமதிப்பீர்களா? திருந்தாத மனங்களுக்காக மாதாந்தம் எழுச்சிப் பேரணி நடத்தி, மனிதனின் அதீத காமக்குணங்களைக் களைய அணி திரளு வீர்களா?

**பாலியல் துஷ்பிரயோகம் என்பது**

**எவரேனும் ஒருவர் தன் அதிகாரத்தின் மூலமாகவோ, அன்றி தன் பலத்தின் மூலமாகவோ, அன்றி தந்திரோபாயமாகவோ ஒரு பிள்ளையின் உடலைத் தன் காமவேட்கையைத் தீர்க்கக் கையாளும் அத்தனை நடவடிக்கைகளுக்கும் பாலியல் துஷ்பிரயோகம் எனப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4 பிள்ளைகளை நெறிப்படுத்துவோம்

இன்றைய பிள்ளைகள் வளர்ந்ததும் பாலியல் தப்பைப் புரியாதிருக்க அவர்களை இப்பருவத்திலேயே நெறிப்படுத்தல் வேண்டும். அதற்கான ஆலோசணைகள் பின்வருமாறு.

- திரைப்படம் பார்ப்பதைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல்.
- வாழ்கையின் சீரழிவு நிலைகளை எடுத்துரையுங்கள்.
- கொடுமை செய்வோர் தண்டிக்கப்படும் விதத்தை எடுத்துக் காட்டுங்கள்.
- கூட்டுக்குடும்ப உறவினைப் பேணுங்கள்.
- பிள்ளைகளுக்கு எல்லோரும் கவனிப்பையும் பாதுகாப்பையும் வழங்குங்கள்.
- பிள்ளைகளை தனி அறையில் படுக்கவிடாதீர்கள்.
- பாலியல் தந்திரங்கள் திரைப்படத்தில் வரும்போது அதை பிள்ளைகளுக்கு எடுத்துரையுங்கள்.
- தனிமையில் வெளியே செல்வதை தவிருங்கள்.
- வீட்டில் தனித்திருப்பதை தவிருங்கள்.
- பாலியல் சம்பந்தமாக வீட்டில் பேசுவதை தவிருங்கள்.
- உடம்பில் தொட்டுப்பேசுவதையும், கட்டிப்பிடித்து விளை யாடுவதையும் தவிருங்கள்.
- சிறு பிள்ளைகள் என்றாலும் அவர்களுடன் மற்றவர்களின் தொடர்புகளை கவனியுங்கள்.
- அயல் வீடுகளில் நீண்ட நேரம் பொழுதைக் கழிக்க விடாதீர்கள்.
- அயல் வீடுகளில் படுக்க விடாதீர்கள்.
- இரவு விழாக்களுக்குச் செல்வுதை தவிருங்கள்.
- பிள்ளைகளுடன் சேரும் நண்பர்களை பற்றி அறிந்து நல்வழிப்படுத்துங்கள்.
- பிள்ளைகளின் முகத்தையும் செயல்களையும் உற்றுப் பாருங்கள்.
- கற்பனையில் மிதக்கிறார்களா? காதல் வசப்படு கிறார்களா? பயந்து ஏங்குகிறார்களா? என்பதை உற்றுப் பாருங்கள்.
- அவற்றிற்கேற்ப பிள்ளைகளின் மனம் தாக்குப்படாமல் நெறிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளைத் தூண்டக்கூடிய படங்கள் பார்ப்பதையும் வசனங்கள் கேட்பதையும் தவிருங்கள்.

- ⏭ வசதிவாய்ப்பு இல்லையே என்பதற்காக பொருத்த மற்றவர்களுடன் பழக விடாதீர்கள்.
- ⏭ வெளிநாட்டுமோகம், பணம், பட்டம், வசதி வாய்ப்புகள் கருதி ஒருவரின் நன்னடத்தையைக் கருதாது அவர்களுடன் பிள்ளைகள் பழகுவதைத் தவிருங்கள்.
- ⏭ திருமணம் முடித்தவர்களுடன் பிள்ளைகள் நெருங்கிப் பழக விடாதீர்கள்.
- ⏭ அளவிற்கு மிஞ்சி எதற்கும் ஆசைப்படாதிருக்க நெறிப்படுத்துங்கள்.
- ⏭ பெண்களைத் தெய்வமாக மதிக்க வையுங்கள்.
- ⏭ பெண்ணின் உடம்பில் இருந்தே நீயும் உருவானாய் என்பதற் குரிய விளக்கத்தை கொடுங்கள்.
- ⏭ வாழ்க்கை போராட்டமானது, அதில் வென்று வாழ்வது தான் வாழ்க்கை. அதைப் பிள்ளைகளுக்குச் சொல்லி நெறிப்படுத்துங்கள்.
- ⏭ பிள்ளைகள். நல்லதையே சிந்தித்து, நல்லதையே செய்து, நல்லதையே பேசி, நல்லதையே பார்த்து வாழ அவர்கள் மனதை செப்பனிட்டு வளருங்கள்.

கைத்தொலைபேசியை வாங்கிக்கொடாதீர்கள். அதற்கான காரணத்தை தெளிவுபடுத்துங்கள்.

பொதுவாக துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் இடங்களாக பின்வரும் இடங்கள் காணப்படும் என்பதை பிள்ளைகளுக்கு முற்கூட்டியே கூறி வைத்தல் வேண்டும். அவையாவன சனநடமாற்றமற்ற ஒதுக்குப்புறங்கள், காடுகள், பற்றைகள், பிறள் நடத்தையுடையவர்கள் நடமாடும் இடங்கள், தனிமைப்பட்ட இல்லங்கள், நீர் நிலைகள், வயல் வெளிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அவ்விடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பின் பாதுகாப்புடன் கூட்டிச் செல்லுங்கள். தனியே அவர்களை விட்டுவிட்டு அகன்று செல்லாதீர்கள். பிற ஆண் களையோ/பெண்களையோ பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும்படி விட்டுச் செல்லாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் விளையாட்டிடங்களுக்கும், பாடசாலைக்கும் பிரத்தியோக வகுப்புக்கள், விசேட நிகழ்ச்சிகளுக்குச் சென்றால் அவர்கள் உரிய இடங்களக்குச் சென்று திரும்புகின்றார்களா? என்பதை அடிக்கடி பரீட்சித்துப் பாருங்கள்.

அந்த அந்த இடங்களுக்கு சென்று அவற்றிற்கு பொறுப்பானவர்களுடன் பிள்ளைகளின் பாதுகாப்பு, வரவு, படிப்பில் கவனம் போன்றவற்றை வினவுங்கள்.

அதிபர், ஆசிரியர்கள், மற்றும் நிர்வாகிகள் போன்றோரிடம் பிள்ளைகளைப் பற்றி நீங்கள் அறியச் சென்றால் உங்களை வெறுத்துப் பேசுவர் என்றோ அவமதிப்பர் என்றோ, அஞ்சி அவர்களிடம் சென்று விசாரிக்காமல் விடாதீர்கள்.

ஆசிரியர்கள், அதிபர்கள் உங்களை அழைக்கும் கூட்டங்கள் மற்றும் வைபவங்களுக்குக்கெல்லாம் சென்று வருதல் மிக மிக அவசியம்

பிள்ளைகள் எங்கு சென்றாலும் கூட்டாகச் சேர்ந்து சென்று வருவது நல்லது. அவ்வாறு சென்றுவரினும் அவர்களின் பாதுகாப்பிற்கு அவர்கள் தான் பொறுப்பாக இருத்தல் வேண்டும். என்பதைக் கூறி வையுங்கள்.

பிள்ளைகளைத் தனியே வாகனத்தில் செல்ல விடாதீர்கள் பிள்ளைகளுக்கு இன்றைய நிலையில் எந்த இடமும் எந்த எவரும் நம்பிக்கைக்குரியவர்களில்லை என்பதை நினைத்து பிள்ளை களைக் கண்ணுக்குள் வைத்திருங்கள்

பிள்ளைகள் பாடசாலை விடுவதற்கு முன் வெளியேறு கின்றார்களா? பாடசாலை விட்டதும் நேரடியாக உரிய நேரத்திற்கு வீடுவந்து சேர்கிறார்களா என்பதை எந்த நாளும் கவனியுங்கள்.

கணனியைப் பிள்ளைகள் பயன்படுத்தும் போது அவர்களைக் கவனியுங்கள். நீங்கள் அருகே செல்லும் போது கணனியில் பார்த்துக்கொண்டிருந்த விடயத்தை உடன் மாற்றுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு செய்வார்களாயின் அவரை அடிக்கடி கவனித்து அறைகள், மறைவிடங்களில் கணனியை பயன்படுத்த விடாது சகலரும் பார்க்கக்கூடிய இடங்களில் வையுங்கள்.

மாலை 5.30 மணிக்குமுன் பிள்ளைகள் வீடுவந்து சேருவதை கட்டாய வழமையாக்கிக் கொள்ளுங்கள்.

பிள்ளைகள் தமக்கென்று வலையமைப்பை உருவாக்கி, புகைப்படங்கள், அவர்கள் பற்றிய தகவல்களை சமூக வலயமைப் பில் சேர்ப்பதை தவிர்ப்பதற்கான காரணங்களைச் சொல்லி, அச்செயற்பாட்டைத் தவிர்ப்பதற்கு வழிகோலுங்கள். பிள்ளைகள் அன்றாடம் யாரோடு பேசுகின்றார்கள், யாருடன் விருப்புடன் பேசுகின்றார்கள் என்பதைக் கவனியுங்கள்.

பெற்றோரிடம் அனுமதி பெறாமல் அயல் வீடுகள், சகோதரிகள் வீடுகள், பாடசாலை அழைப்புக்கள், விசேட நிகழ்வுகள், விசேட வகுப்புக்கள் போன்றவற்றுக்குச் செலவதை அனுமதிக்காதீர்கள். தடைகளாக அன்றி அவர்கள் மீது கொண்ட அக்கறையினால் என்பதைப் பிள்ளைகள் புரியத் தக்க முறையில் வழிப்படுத்துங்கள்.

தாய் இவ்விடயங்களில் தன் பிள்ளைகளுக்குக் காவல் காப்பதிலும் சிறந்த போதனா ஆசிரியராகச் செயல்படுவது மிக மிக அவசியம்.

## 3.4 பெற்றோர்கள் நண்பர்கள் என்ற நிலையில் (கலந்துரையாடுதல்)

பிள்ளைகள் அறியா நிலையிலிருந்து அறியும் நிலைக்குத் தம் உடல் உள நிலைகளின் உந்துகையின் படிகளில் ஏறித் தம்மை வளம்படுத்துபவர்கள், பூரண மனித நிலைக்குத் தம்மைக் கொண்டு வருவதற்காக முயன்று கொண்டு, ஓயாமல் இயங்கு பவர்கள். அவர்களுக்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத் தவர்கள் அனைவரும் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும்.

பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் விருத்தி தொடர்பாக மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்களையும் பிள்ளைகள் பூரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடன் சமத்துவ அணுகுமுறையைக் கையாளுதல் வேண்டும். அத்தகைய அணுகுமுறைகளை ஆசிரியர்களும் உறவினர்களும் சமூகமும் கையாளும் போது பிள்ளைகள் சிறந்த மகிழ்ச்சிக்குரிய நல்நடத்தையினராக மிளிர்வர். அதனால் வீடும், நாடும் நல்மாந்தார்களால் ஒளிரும்.

## சமத்துவ அணுகுமுறைகள்

கண்ணோடு கண்பார்த்துப் பேசுதல், சிரித்தல்
கருணை கொண்டு பார்த்தல்
கனிவாகப் பார்த்துப் பேசுதல்
மகனே! மகளே! செல்லமே! தெய்வமே! என்னுயிரே! என இன்பம் கனிய அழைத்தல்
பிள்ளைகள் வெளியே செல்லும் போது வழியனுப்புதல், வருகைக் காகக் காத்திருத்தல், போன்ற அக்கறைகளைக் காட்டுங்கள்.

பள்ளிக்கூடத்தில் மற்றும் சென்ற இடங்களில் நடந்த வற்றைத் தினமும் குறித்த நேரத்தில் கேட்டு மகிழ்தல், பின்னூட்டல் வழங்குதல், சரி பிழைகளை உரசிப்பார்த்தல். அவர்களுடன் சேர்ந்து கருத்துக்களை ரசித்தல், பெரியவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் சிறந்த தலைவர்களின் வாழ்க்கை பற்றி பேசுதல். அவர்களின் உயர்விற்கான காரணிகளைக் கலந்து ரையாடுதல்.

அன்றாடம் கற்றவற்றை கேட்டல், தெரியாதவற்றை கேட்டுக் கற்றுத் தெளியும் வழியை பேசுதல், கற்ற விடயங்களை மீட்டுக் கற்பதன் பலனை உரையாடுதல்.

இவற்றுடன் தமது உடல் உறுப்புக்கள் பற்றிய தகவல்களையும் பெற்றோர்கள் வழங்குதல் வேண்டும். உடல் உறுப்புக்களாகிய மெய் வாய் கண் மூக்கு, செவி என்பவை எம்மை வழிப்படுத்தும் நிலைமைகளையும், அவற்றின் செயற்பாடுகளால் எம்சிந்தைகளில் ஏற்படும் நல்ல கெட்ட சிந்தனைத் தூண்டல்களையும், அவற்றை நெறிப்படுத்த எம்மால் முடியும் என்பதையம் கலந்துரையாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்** - நல்லது கெட்டது எல்லாவற்றையும் பார்த்து மூளைக்குத் தகவல் கொடுக்கின்றது. அழகானவற்றைக் கண்டு ஆசைப்பட வைக்கிறது. அதை வாங்கி அன்றி அத்துமீறி அடைய அனுபவிக்க தூண்டுகிறது. அத்துமீறும் போது களவெடுக்க தட்டிப்பறிக்க மனம் ஏவும். அந்த மனதை எம்மால் கட்டுப்படுத்த முடியும். உழைத்து வாங்கினால் அதனால் அடையம் இன்பம் நிரந்தரமானது. அதேபோல் அழகான பெண் / ஆணைக் கண்டதும் அவர்களுடன் பார்த்துப் பேச, பின் தொடர மனம் ஏவும். அவர்களை நெருங்கிக் காதலிக்கின்றேன் என்று சொல்ல மனம் ஏவும். அவர்களின் கண்ணோடு கண் பார்த்து தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க விரும்பும், அழகை இரசித்த மனம் அவர் எப்படிப்பட்டவர்? திருமணமானவரா? ஆகாதவரா? என்றும் நல்லவரா? கெட்டவரா? என்றும் உரசிப்பார்க்காமல் அவரைத் தேடி அவரை பார்ப்பதில் அலாதி விருப்பம் கொண்டு செயல்பட வைக்கும்.தாய் தந்தையரை சகோதரர்களை நினைத்துப் பார்க்காமல் மெய்மறந்து நடக்க வைக்கும். இந்நிலை கண் மனதை இயக்கி நிற்கும் நிலை என்பதை எடுத்துரையுங்கள். இந்நிலை பின் விளைவுகளை மூளை சிந்திக்காது மனதை இயக்கியதன் செயற்பாடு இதனைப் பிள்ளைகளுக்குச் சொல்லி உரையாடுங்கள். இவ்வாறு மனம் தாவுவதை பகுத்துணர்ந்து எம் மனதை நெறிப்படுத்த மூளை வழிவிடும் என்பதையும் சொல்லி வையுங்கள்.

**காது**– கண்போன்றே காதும் எம்மை இயக்குவதில் வல்லமை கொண்டது. அன்பே! ஐ லவ் யூ என்கின்ற வார்த்தைகள் கட்டிளமைப் பருவத்தினரிடம் திடீர் வியப்பை ஏற்படுத்தக் கூடியது. சொன்னவர் அழகோ அழகற்றவரோ நல்லவரோ கெட்டவரோ என்று கூடப் பாராமல் அவர்கள் பால் மனதை ஈர்த்துச் செல்லக்கூடியது. ஒருவரின் பாடல்கள் வீரதீர வசனங்கள், பேசும் பாங்கு போன்றவை ஒருசிலரின் காதுக்கு இனிமை சேர்க்க, மனம் அதில் சந்தோசத்தில் மிதக்கும். அவரை அறியாமலே அவர் / அவள் மீது இனம்புரியாத விருப்பை ஏற்படுத்தும். அதனால் அவரை நாடிச் சென்று அவரைத் தன் துணைவன் அல்லது துணைவியாக ஏற்றுக்கொள்ள விரும்பும். இத்தகைய உயிர்களின் இயல்புநிலை ஒருவர் மனதை ஒருவர் பறிக்கும் இயல்பு நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை புரிய வையுங்கள். பிள்ளைப் பருவக்காதல் அறியாக் காதல். குடும்பம் பற்றியும் அதன் பொறுப்புக்கள், அதன் பக்குவ நிலை பற்றியும் அறியாத காதல், எனவே செவிவழிவரும் உணர்வு தூண்டல்களின் சாதக பாதக நிலைகள் பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரை யாடுங்கள்.

**வாய்** – ஒருவரின் பாட்டு, பேச்சு, சிரிப்பு, புன்சிரிப்பு போன்றவை இன்னொருவர் மனதைக் கவரும், அப்போது அவரை அறியாமலேயே அவரின் மேல் ஓர் இனம்புரியாத மோகம் வரும். அதனால் அவரை ஒருவரோ பலரோ நெருங்குவர். இந்நெருக்கம் இயல்பானது. இதைப் பிஞ்சு வயதினர் புரிந்து தம்மைத் தாமே சிந்தித்துப் பார்க்கும் உத்திகளை பிள்ளைகளுடன் பேசிக் கலந்துரையாடுங்கள்.

**மனம்** – பிறரின் கண், காது, வாய், உடல், கம்பீரம், மனநிலை போன்றவற்றின் செயற்பாடுகள் மற்றவர் மனதைக் கவரும். அவரைப் போன்ற அத்தனை செய்லகளும் பிறரிடமும் உன்னிடமும் உண்டு. அதற்காக அவர்களை அடைவதற்குரிய வழிகளையோ அன்றி கிடைக்காவிட்டால் மனத்தாக்க நிலைக்கோ உட்படக்கூடாது. அதனால் உங்கள் வாழ்க்கை பாதிப்பு அடையும். அந்நிலை உங்களது மனதை ஊன நிலைக்குத் (பைத்தியம்) தள்ளிவிடும். என்பதை சாதாரணமாக பிள்ளைகளுடன் பேசிக் கொள்ளுங்கள்.

(மனித மனம் இட், அகம், அதியகம் என்னும் மூன்றுநிலைகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இட் திடீர் முடிவு எடுக்கும். அகம் முடிவெடுக்க முடியாமல் இட்டிற்கும் அதியகத் திற்கும் நடுவில் நின்று சமநிலைப்படுத்தும். அதியகம் அவசரப் படாமல் நிதானமாக சரியானவற்றைச் சொல்லும். இந்நிலைகளில் அதியகத்தின் சரியான தீர்வினைப்பெற திடீர் முடிவினை எடுக்காமல் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.)

காதலுக்குச் செலவிடும் நேரத்தையும் மனக் குழப்பத் தையும் கற்பதில் வெற்றி, சாதிப்பதில் சாதனை, பிற மொழி கற்றல், புதியவை செய்தல், நடித்தல், கவிதை, கட்டுரை, சிறுகதை, எழுதுதல் போன்வற்றில் செலவிடுவது பற்றிப் பேசுங்கள். தனக்குள் இருக்கும் ஆற்றலை வெளிக்காட்டி அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கான அத்திவாரம் ஆக்கலாம். வருமானம் ஈட்டக் கூடியதாக ஆக்கலாம். தான் கற்றதைக் கொண்டு தனக்கென ஒரு தொழிலைப் பெற்றபின் காதலிப்பதும் கல்யாணம் முடிப்பதும் எவ் வளவு இன்பகரமானது என்பதைச் சீர்தூக்கிக் கலந்துரை யாடுங் கள். இவை முன்னெச்சரிக்கையாகக் கூறாமல் ஓர் புரிந்துணர் வுடன் ஓர் கலந்துரையாடல்போல் சொல்லாமல் சொல்லுங்கள்.

**தோல் தொடுகைகள்** – சிலரின் தொடுகைகள் (ஆண்/பெண்) மனதிற்கு வெறுப்பையோ அன்றி விருப்பத்தையோ ஏற்படுத்தும், உணர்வுகளைத் தூண்டும் அத்தகைய தொடுகையால் பிள்ளைகள் அவர்பால் நாட்டம் கொண்டு அவரைப் பாலியல் ரீதியாக நாடச் செய்யும். அதில் மறைவிடத் தொடுகைகள் நாடும் வேகத்தை அதிகரிக்கும். இத்தகைய தொடுகைகள் பிள்ளை களுக்குப் பாதகமாவை. அத்தொடுகைக்குரியவரை பெற்றோர்/ பாதுகாவலர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தல் வேண்டும் என்பதைப்பற்றியும், உடம்பின் தொடுகைகளால் மனம் தன் நிலை மாறும் பாதக நிலைமைகளைக் கலந்துரையாடுங்கள்.

**உடல் உறுப்புக்கள் பற்றிப் பேசுதல்.**

ஆண் பெண் உடல் உறுப்பு நிலைகள், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிப் பேசுங்கள். பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளை களும் பருவம் அடையும் நிலைகளைத் தெரியப்படுத்துங்கள். அதனால் ஒரு குழந்தையைப் பிரசவிக்கும் தகுதி நிலையை எடுத்துரையுங்கள். ஒருநாள் ஆண் பெண் உறவு கொண்டால் பிள்ளை உருவாகும். என்பதையும் சிறுவயதுத் தாய்க்குப் (11 – 23 வயது) பிறக்கும் குழந்தைகள் போசாக்கற்றவர்களாகவும், பூரண உடல் உறுப்புக்களின் வளர்ச்சியற்றவர்களாகவும் பிறப் பதையும், இளவயதுத்தாயின் உடல் பாதிப்படையும் நிலையையும் தெரியப்படுத்துங்கள். இளமைப்பருவத்தைத் தாய் தந்தையருடன் அனுபவிப்பதிலுள்ள சுகநிலையையும், உடல் உள எழுச்சி நிலைகளையும், ஆளுமைப் பலத்தையும், பொறுப்புக்கள் அற்ற குதூகல கூட்டு வாழ்க்கையையும், தன்னில் பொறுப்பற்ற நிலை யில் சேர்த்துக்கொள்ளும் ஆற்றல்களையும் எடுத்துக் கலந்துரை யாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வெளிப்படையான கருத்துப் பரிமாற்றக் கலந்தரையாடல்கள் இல்லையெனில், பிள்ளைகள் தன்னைத் தான் மௌன நிலையில் இருந்து சிந்தித்து, அர்த்தம்புரியாமல், இரகசியமாகத் தேடுவதும், கள்ளமாக அவற்றை அனுபவிக்க விளைவதுவும், அத்துமீறி அபகரித்து அனுபவிக்க விளைவர், இந்நிலை அவர்களுக்குப்பாதக விளைவை ஏற்படுத்தும். இத்தகைய திறந்த கலந்துரையாடல்கள் பிள்ளைகளுக்கு வெளிப்படையாக சந் தேகங்களை தீர்க்ககும். அதனால் அவர்கள் நன்மை அடைவர்.

பாலியல் பற்றி எதுவுமே தெரியாதவர்க்கு பாலியல் பற்றிய வசனங்கள், காட்சிகள், பிறரின் பாலியல் புறப்பாடுகள் போன்ற வற்றை திடீரென சந்திக்கும்போது அவர்களின் மனத்தில் திடீர்த் தாக்கத்தை ஏற்படுத்தும். பயம் குடிகொள்ளும் இத்தகைய திறந்த கலந்துரையாடல்களின் மூலம் அந்நிலைமைகள் சாதாரண நிலை எனப் பிள்ளைகளின் மனதை இலகுபடுத்த முடியும். அல்லது முற் கூட்டியே அறிந்தவிடயம் என்ற நிலையை பிள்ளை உணரும்போது பிள்ளையின் மனதைப் பேணக்கூடியதாய் அமையும்.

பெற்றோர்கள் நேரடியாகப் பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசும் போது, பிள்ளைகள் தங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும், வழிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

பிள்ளைகள் எதைக்கேட்டாலும் நீங்கள் எந்தவேலை செய்து கொண்டிருந்தாலும் அவர்கள் சொல்வதை அமைதி யாகவும் அக்கறையுடனும் கேளுங்கள், புன்முறுவலுடன் கேளுங் கள், அப்படியா? சரி எல்லோரும் சேர்ந்து முடிவெடுப்போம் ஒன் றிற்கும் பயப்படவேண்டாம் என்று ஆறுதல் கூறுங்கள்.

அதனால் பிள்ளைகள் தம்மை பெற்றோர்கள் மதிப்பதாகவும், தம்மில் அக்கறையுடன் இருக்கின்றார்கள் என்பதையும் உணர்வர். அதனால் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்ய எத்தணிக்கும் சம்பவங்களை உடனுக்குடன் ஒளிவு மறைவின்றி பிள்ளைகள் தெரியப்படுத்துவர். அத்துடன் பெற்றோர் சொல்லும் அறிவுரைகளை யும் கேட்டு நடப்பர். இத்தகைய நடைமுறைகளைப் பெற்றோர்கள் கடைப்பிடிப்பதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து பிள்ளை களைத் தப்பிக்க வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.5 ஆசிரியர்களின் பங்கு

ஆசிரியர்கள் தன் மகிழ்ச்சிகரமான கற்பித்தல் மூலம் பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்துவர். பிள்ளைகளின் மகிழ்வில் மாற்றங்கள் தென்பட்டால் அதற்கான காரணங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். கற்றலில் அக்கறை இன்றி இருக்கின்றார் களா? பயப்படுகின்றார்களா? கற்பனையில் மிதக்கின்றார்களா? சோகமாய் இருக்கின்றார்களா? பலவீனமுற்று இருக்கின்றார்களா? என்பதை உற்று நோக்குதல் வேண்டும்.

சந்தேகம் இருப்பின் குறித்த பிள்ளையை நட்பு ரீதியில் அணுகி கலந்துரையாடி நிலைமையை அறிதல் வேண்டும். பிள்ளை பாதிக்கப்பட்டிருப்பது தென்பட்டால் பிள்ளையின் வீட்டிற்குச் சென்று நிலைமையை இரகசியம் காத்து பெற்றோரிடம் தெரியப்படுத்தல் வேண்டும். பெற்றோர் உரிய நடவடிக்கை எடுக்க பின்வாங்கினால் அன்றி நடவடிக்கை எடுக்கத் தெரியாதிருந்தால் உடனே சிறுவர் பகுதியினருக்கும், கிராம உத்தியோகஸ்தர் மற்றும் 1929 தொலைபேசிக்கும், தெரியப்படுத்திப் பிள்ளை களுக்கு விமோசனம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். பாதிக் கப்பட்ட பிள்ளையின் பாதிப்புப் பற்றி வெளியில் தெரியப்படுத் தாமல் இரகசியம் காத்தல் வேண்டும்.

பாடவேளைகளில் அல்லது பிரத்தியேக நேரத்தில் காமுகர்களின் பாலியல் தூண்டல் உத்திகளைப் பற்றியும், அதன் பாதிப்புக்கள் பற்றியும் எடுத்துரைத்தல் வேண்டும்.

**சமூகம்**

பாலியல் துஷ்பிரயோகிகள் எம்சமூகத்தின் மத்தியில் தான் நடமாடுகின்றார்கள். எந்தப் பிள்ளையாயினும் எவராலும் கெடுக்கப்பட்டால் சமூகம் கொதித்தெழுதல் வேண்டும். துஷ் பிரயோகிகளைக் கண்காணிப்பவர்களாகவும், பிள்ளைகளைக் கண்காணிப்பவர்களாகவும், சந்தேகத்திற்கிடமாக நடமாடும் கயவர் களைக் கண்காணிப்பவர்களாகவும், சந்தேகம் ஏற்பட்டால் பொலி சாருக்குத் தகவல் கொடுத்து பிள்ளைகளைக் காப்பாற்ற முன்னிற் பவராகவும் இருத்தல் வேண்டும். தமக்குள் குழுவை அமைத்துப் பிள்ளைகளைக் காப்பாற்ற எழுச்சி கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.6 சிறுவர்களே!

பருவத்திற்கு வந்த (11வயதுக்குமேல்) ஆண், பெண் பிள்ளைகள் அனைவரும் ஓர் குழந்தையை பெற்றெடுக்கக் கூடியவர்கள். குறிப்பாகப் பெண் பிள்ளைகளின் உடல் ஆண் பிள்ளைகளுடன் உறவு கொள்ளும் போது, ஆண்களிடமிருந்து விந்து என்கின்ற உயிர் கரு பெண்ணின் கருப்பையுக்குள் புகுந்து, பெண்ணின் கருமுட்டையுடன் சேர்ந்து குழந்தையை உருவாக்கும். இவ் இயல்பு நிலை தவறான வழியில் ஒன்றிணையும் ஆண், பெண் இருவருக்கும் ஆபத்தானது. உடல் முதிர்ச்சியடையாத சிறு பெண்பிள்ளைகளின் வயிற்றில் உருவாகும் குழந்தைகள் பூரண வளர்ச்சித்திடம் அற்ற குழந்தைகளாகப் பிறக்கின்றனர். அதனால் அக் குழந்தைகள் தாய்க்குச் சுமையான குழந்தைகளாக இருக் கின்றனர். அத்துடன் சிறு வயதுத் தாயின் உடலும் பாதிப்படை யும். சில சமயம் மரணம் கூட ஏற்படலாம்.

பெண் பிள்ளைகளே! சிறு வயதில் பாலியல் தவறை நீங்கள் செய்தால் சமூகம் உங்களை ஒதுக்கிவிடும். சட்டமும் உங்களை பிரித்து வைக்கும்.

இளம் ஆண் பிள்ளைகளே! இளம் பெண் பிள்ளைகளே! உங்களின் உடம்பு எந்நேரமும் மலர்ந்து கொண்டிருப்பது. அதனை எவரது கைகளும் படும்படியாகப் பழகாதீர்கள். பெற்றோர்களும் மற்றோர்களும் அதனை கடைப்பிடித்தல் வேண்டும். பொருட்கள் கொடுத்து வாங்கும் போதும் கைகள் படாதபடி கொடுத்து வாங்குங்கள். நண்பர்களாகப் பேசிப் பழகுங்கள். பேச்சில் உண்மையும் ஒழுக்கமும் பேணுங்கள். எதிர்ப்பால் (பெண் - ஆண்களின்) தொடுகைகள் உடம்பிற்கும் மனதிற்கும் விகாரத்தை ஏற்படுத்தும். கோபம் வரும். அதனால் அடித்துவிடும் நிலையும் வரும். சிலிர்ப்பு வரின் இனம் புரியாத அருவருப்பும் வரும். பாலியல் என்று புரியாத உந்தலையும் கொடுக்கும்.

சிலருக்கு அத் தொடுகை உடம்பெல்லாம் புல்லரித்து அவன்/ அவள் மீது ஏக்கத்தை உருவாக்கும். ஏனென்று தெரியாத ஏக்கத்தால் அவன் - அவளைத் தேடவும், அவள் அவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடவும் தூண்டும். அத் தேடல் பாலியலில் முனைப்பைத் தூண்டும். தூண்டினால் நீ செய்யும் தப்பிற்கு நீயே காரணம். அன்றி அவனின் / அவளின் தொடுகையா காரணம் என்று இனம் காண முடியாத நிலை தோன்றும். இந் நிலையால் படிப்பில் ஈடுபட்ட மனம் திசை திருப்பப்பட்டுவிடும். அதனை தடுத்துவிட்டால் உங்களின் எதிர்காலம் வசந்தத்தை நோக்கி நகரும்.

இதைப் போன்றதே காதில் விழும் அன்பே! ஐ லவ் யூ நான் உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை, உனக்காக உயிரையும் கொடுப்பேன். போன்ற வசனங்கள் இளம் வயதில் முதல் முதலில் கேட்கும் போது கேட்டவரின் உள்ளமும் உடலும் பரணமிக்கும். உங்களை அறியாமலே காதல் அலைகள் மோதும். இந்நிலை காதலில் உங்களை சிக்கவைக்கும். அந்நிலையை தவிர்ப் பதற்கு காதல் வசனங்களை உளறுபவர்கள், உளறட்டும் பிதற்று பவர்கள் பிதற்றட்டும் என்று வாங்கிய காதோடு விட்டு விடுங்கள்.

கண்களும் ஆண் - பெண் ஈர்ப்பை கவரும். ஒருவரின் அழகு, அவரின் சாயல், உடல் கம்பீரம் அறிவு, பதவி, பட்டங்கள் நடை உடை பாவனைகள், அணுகுமுறைகள் மற்றவர்களைக் கவரும். அந்தக் கவர்ச்சி அவரை அணுகச் செய்யும். அவர் மீது காதல் வசப்பட வைக்கும். காதல் கைபடாமல் இருந்தால் அதற் குத் தனி மரியாதையை இருவரும் செலுத்துவர். அது புனித மானது. அது மனதோடு புரியும் காதல். மனதோடு இணைந்தபின் பருவம் வந்தபின் உடலோடு இணையும் காதல் தெய்வீகமானது. இத்தகைய நிலையில் பாலியல் புரிவோரின் மகிழ்ச்சி சொர்க் கத்திற்குரியது. இறை இன்பத்திற்குரியது. அதற்காக 23 வயது வரை காத்திருங்கள். அந்த வயதில் உங்களை நீங்கள் அறிய முடியும். வாழ்க்கையை நெறிப்படுத்த முடியும்.

அப்போது சரி பிழை தெரியும். பிள்ளையைச் சுமப்பதும், பெறுவதும், வளர்ப்பதும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். பிஞ்சில் பழுக்காதீர்கள். பழுத்துவிட்டால் பழம் சுவைக்காது அழுகி விழுந்து விடும். உங்கள் வாழக்கையை நீங்களே போட்டு உடைக்காதீர் கள். அதற்காக முளைக்கும் காதல் வேகத்தைக் கட்டுப்படுத்தி காலம் வரும் வரை காத்திருங்கள். உடலோடு இணையாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.7 தவறான முடிவை எடுக்காதீர்

ஓர் குழந்தை உருவாக ஆணும் பெண்ணுமே காரணம். உருவான கருவை வேண்டா வெறுப்பாய் அழிப்பது மாபெரும் பாவம். எமக்குக் கடவுள் தந்த உடம்பையும் அதில் அமைக்கப் பட்டுள்ள கண், காது மூக்கு, மூளை, இதயம், கை, கால், வாய், அத்தனையும் எம்மால் ஆக்க முடியுமா? ஓர் உயிரையும் அதன் உடம்பையும் உருவாக்க இறைவன் எவ்வளவு கஷ்டப்பட்டிருப் பான்? என்று உங்களுக்குள்ளே ஆராய்ந்து பாருங்கள்.

வயிற்றில் தவறான வழியில் கரு உருவனால் பெற் றோருக்கும் சமூகத்துக்கும் பயந்து, மானம் மரியாதைக்கும் பயந்து தற் கொலை முடிவை தெரிந்தெடுக்காதீர்கள். தற்கொலை செய்து விட்டால் பெற்றோரும் சமூகமும் சந்தோசப்படுமா? மானம் மரியாதை மீண்டும் கிடைத்து விடுமா? உன் உயிர் உன் உடம்பை விட்டுப் பிரிந்தபின் மானம் மரியாதையைப் பார்த்துச் சந்தோசப் படுமா? தற்கொலை செய்வது மகா பாவம் எனப்படுகிறது. ஓவ்வொரு உயிரும் உடலை விட்டு பிரிந்த பின், அவ் உயிர் இறைவனுடன் ஒன்றினையும். தற்கொலை செய்து கொண்ட உயிரை இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை. இறைவன் படைத்த உயிரை இறைவன் அழைக்கும் போது தான் உடலைப்பிரிந்து உயிர் செல்லும். அதுதான் உயிர்களின் இறப்பின் நியதி. உன் உடலிலிருந்த உன் உயிரை நீயே தற்கொலை மூலம் வெளி யேற்றினால் அவ் உயிர் இறைவனிடம் செல்ல முடியாது. இவ் உயிரை இறைவன் அழைக்காத போது, அவ் உயிர் உருவமற்ற உடலற்ற ஆவியாக பேயாய் பிசாசாய் உண்ண உணவின்றி நீறின்றி அகோரப்பட்டு அலைந்து திரியும்.

இந் நிலை தெரியாதவர்களே தற்கொலை புரிகின்றனர். இந் நிலை புவியில் பிறந்த உயிரினங்கள் எவருக்கும் வரவே கூடாது. ஏதற்கும் தற் துணிவு இருந்தால் சவால்களை எதிர் கொண்டு வாழ முடியும். அதற்காகவே தப்புச் செய்யத்தூண்டும் உங்கள் மனதை நீங்களே கட்டுப்படுத்திக் கொண்டால், உங்கள் வாழ்க்கையை வசந்தமாய் அமைக்க உங்களால் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இந்நூலை ஆக்குவதற்கு உற்சாகமளித்து வாழ்த்துரையும் வழங்கிய கௌரவ கல்வி அமைச்சர் (வட.மா) த.குருகுலராஜா அவர்களுக்கும், அவர்தம் பிரத்தியேகச் செயலாளர் அவர்களுக்கும், ஆசிரிய நண்பர்களுக் கும், யாழ் சர்வமதக் குழுவினருக்கும் எனது நன்றிகள்.

இந்நூலுக்கான ஆலோசனைகளை வழங்கிய எனது பெரு மதிப்பிற்குரிய நண்பியும், முன்னாள் கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரி முதுநிலை விரிவுரையாளருமான திருமதி.ஜெயமலர் தியாகலிங்கம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலை சிறப்புற அச்சிட்டு வழங்கிய நல்லூர் மதிகலர்ஸ் அச்சகத்தினருக்கும் நன்றிகள்.

இந்நூலை வெளியிட உதவிகள் வழங்கிய அனைத்து நல்நெஞ்சங்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org